# ஞானபோதினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

ஸம்புடம். IV.

1900-ஆகஸ்டு முதல் 1901-ஆகஸ்டுவரை.

பத்திராதிபர் :—பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.

சென்னை :

தாம்ஸன் கம்பெனியார்

பதிப்பித்தது.

1901.

# பொருளடக்கம்.

;யாதேவி.—தி. அ. சுவாமிநாத ஐயர், 342.
துவிதவாக்கியத் தெளிவுரை.—141, 262.
சிபிரிவாற்றுமை.—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ. 249.
னிபெஸன்ட் அம்மைசரித்திரம்—சமுத்திர புரவாசி, 34.
,சாரவிளக்கம்.—விருதை-சிவஞானயோகிகள், 21, 226,
பூர்க்கிமதேயர் கண்டவிதி.—சி. சுப்பிரமணியாசாரியர், பி. ஏ., எல். டி. 274.
ந்துஜன சமூகச்சீர் திருத்தம்.—சா. சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ. 287, 345.
ராமானுஜாசாரியர் சரிதம்.—தி. கோ. ஸ்ரீரங்காசாரியர், 106, 169, 228, 298, 327.
லுள விளையடு.—சி. என். சரவணமுதலியார், 130.
ாப்பயிற்சி.—ச. கி. சுந்தராசாரியர், 180, 253, 449.
ிலொடுக்கச் சிறப்புப்பாயிரவுரை.—(ஸ்ரீலஸ்ரீ அருட்பா—இராமலிங்கம் பிள்ளையவர்கள்,) 110, 376.
ஷண்மை.—வி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, 73.
ரைத்தொகுதி.—சீதாபதி. 116.
கந்தபுராணஸாரம்.—யா. நா. கதிரைவேற் பிள்ளை, 350.
கமலினி.—சருக்கை-இராமசாமி ஐயங்கார், பி. ஏ. 17, 90.
கலங்கரை விளக்கம்.—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ. 154.

கல்லாடவாராய்ச்சி.—எஸ். ஏ. திருமலைக்கொழுந்துபிள்ளை
389
கல்விச்செல்வம்.—செய்யூர்-முத்தைய முதலியார், 257.
காணமற்போனதோர் ஒட்டை.—ந. பலராம ஐயர், 196
குயில்.—ந. பலராம ஐயர், 77.
கையறுநிலை.—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.
சந்தானகுரவர்.—அனவரத விநாயகம்பிள்ளை, எம். ஏ. 25,
சமயதத்துவஞானம்.—தண்டலம். பாலசுந்தரமுதலியார்,
4
சமாசாரக் குறிப்புகள்.—40, 79, 120, 160, 200, 240, 2
320, 359, 399, 439, 48
சரித்திர விநோதாமிர்தம்.—சாமிநாத பிள்ளையவர்கள், 15
193, 3
சாந்திவிலாசம்.—விருதை. சிவஞானயோகிகள், 75.
சிலப்பதிகார வாராய்ச்சி.—பிரணதார்த்திஹர சிவன், பி.
163, 217,
சீவக சிந்தாமணி.—நூல்நலங் காண்போன், 52.
சீவகசிந்தாமணி வசனம்.—யா. நா. குதிரைவேற்பிள்ளை. 2
ஜெயகாந்தன்.—தி. மே. முருகேச முதலியார், 353, 393, 4
சோமசுந்தர நாயகர்.—நி. தங்கவேலு முதலியார், 338.
தனிப்பாசுரத்தொகை.—பரிதிமாற்கலைஞன், 105.
தமிழுலகம்.—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
தமிழ்ப்புலவர் நிலைமை.-மாகறல். கார்த்திகேய முதலியார், 308.
தாயுமானர் தத்துவ விசாரம்.—யா. நா. குதிரைவேற்பிள்ளை.
401.
திருப்பரங்கிரிக்குமரனூசல்.—திருவெவ்வுளூர் - இராமசாமிச்
செட்டியார், 301.

திருவிடைமருதூர்க் கலம்பக வாரர்ய்ச்சி.—ந. பலராம ஐயர், 385.

திருவிளையாடற் கருப்பொருள்.—ஏ. சங்கரலிங்கம் பிள்ளை, பி. ஏ. 304, 383, 431, 465.

தோத்திரப்பா.—ஒரு தமிழ்ப்புலவர், 312.

நாடகவிலக்கணச் சுருக்கம்.—தி. அ. சுவாமிநாத ஐயர், 135.

நீர்க்கோட்கருவி.-சி. சுப்பிரமணியாசாரியார், பி. ஏ., எல். டி. 459.

பகவத்கீதை.—தி. அ. ஸ்வாமிநாத ஐயர், 185, 266.

பாரதஸாரம்.—கல்குளம்-குப்புசாமி முதலியார், பி. ஏ. 3, 41, 81, 121, 182, 208, 332, 366, 424.

புத்தகக்குறிப்புகள்.—120, 157, 239, 399,

புதுநூற்றூண்டு.—பத்திராதிபர், 201

பெண்கல்வி.—அசலாம்பிகையம்மாள், 145.

பக்கனூர் சிற்றுரை.—டி. ஆர். இராமநாத ஐயர், பி. ஏ., எல். டி. 71.

பௌத்தமதம்.—பிரமஸ்ரீ-தி. நீலமேக சாஸ்திரிகள், 139.

மகாதேவ கோவிந்தரானடே.—கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார், பி. ஏ. 281.

மகாபாரதம்.—தி. த. கனகசுந்தரம் பிள்ளை, பி. ஏ. 321,

மகாராணியவர்கள் மீது இரங்கற்பா.—
அசலாம்பிகை அம்மாள், 276,
சா. சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., 277.
மு. ரா. அருணாசலக்கவிராயர், 279.

மதிவாணன் கதை.—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ. 445

மதுரைப் புதுச்சங்கம்.—ஐ. ப. வாசுதேவைய் பந்துலு, 441.

மழை விண்ணப்பம்.—மாகறல். கார்த்திகேய முதலியார், 347.

மாதர் சுதந்திரம்.—சருக்கை. இராமசாமி ஐயங்கார், பி. ஏ. 161.

மானவிஜயம்.—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ. 67.
முதலாழ்வார்கள் வைபவம்.—திருமணம். செல்வகேசவராய முதலியார், எம். ஏ. 45
மூவகை யொருநெறி.—எஸ். அனவரத விநாயகம்பிள்ளை, எம். ஏ. 462.
ருக்மணி சரித்திரம்.—கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார், பி. ஏ. 64, 94, 166, 237.
வாழ்க்கைப்பயன்.—சருக்கை. வரதாசாரியர், 232, 436.
விக்கிரமோர்வசி நாடகம்.—சருக்கை. இராமசாமி ஐயங்கார், பி. ஏ. 285.
விக்டோரியா சக்கிரவர்த்தினியார்.—கல்குளம் குப்புசாமி முதலியார், பி. ஏ. 241.
விஞ்ஞாபனம்.—பத்திராதிபர்.
விநோதக் கடவுள் வாழ்த்து.—சேறை. அனந்த நாராயண ஐயர், 157.
வேனிற்பாட்டு.—நாகப்பட்டினம் - வேதாசலம் பிள்ளை, 433.
ஹிரண்மயி சரித்திரம்.—தி. அ. சுவாமிநாத ஐயர், 220,

---

# விஷயதானஞ் செய்தவர்கள்.

அசலாம்பிகையம்மையவர்கள்.—பெண்கல்வி, மகாராணியவர்கள்மீது இரங்கற்பா.

அநவரத விநாயகம் பிள்ளை, எ. ம். ஏ.—சந்தானகுரவர், மூவகை யொருநெறி.

அருணாசலக் கவிராயர்.—மகாராணியவர்கள் மீது இரங்கற்பா.

அனந்த நாராயண ஐயர், (சேறை).—விநோதக் கடவுள் வாழ்த்து.

இராமசாமி ஐயங்கார், பி. ஏ. (சருக்கை).—கமலினி, மாதர்சுதந்திரம், விக்கிரமோர்வசி நாடகம்.

இராமசாமி செட்டியார், (திரு எவ்வுளூர்).—திருப்பரங்கிரிக் குமர னூசல்.

இராமநாத ஐயர், (டி. ஆர்.) பி. ஏ. எல்., டி.—பேக்கனூர்சிற்றுரை.

கதிரைவேற் பிள்ளை, (யா. நா).—சீவகசிந்தாமணி வசனம், கந்த புராணஸாரம், தாயுமானூர் தத்துவ விசாரம்.

கனகசுந்தரம் பிள்ளை, (தி. த.) பி. ஏ.—மகாபாரதம்.

கார்த்திகேய முதலியார் (மாகறல்).—தமிழ்ப்புலவர் நிலைமை, மழை விண்ணப்பம்.

குப்புசாமி முதலியார், (கல்துளம்.) பி. ஏ.—பாரதஸாரம், விக்டோரியா சக்கிரவர்த்தினியார்.

சங்கரலிங்கம்பிள்ளை (ஏ.) பி. ஏ.—திருவிளையாடற் கருப்பொருள்.

சமுத்திர புரவாசி.—அனிபெஸன்ட் அம்மை சரித்திரம்.

சரவண முதலியார், (சி. என்).—உடலுள வியைபு.

சாமிநாத பிள்ளையவர்கள்.—சரித்திர விநோதாமிர்தம்.

சிவஞானயோகிகள் (விருதை).—ஆசாரவிளக்கம், சாந்தி விலாசம்.

சீதாபதி.—கட்டுரைத்தொகுதி.

சுந்தராசாரியர், (சருக்கை-கி).—உள்ளப்பயிற்சி.

சுப்பிரமணியாசாரியார், (சி.) பி. ஏ., எல். டி.,—ஆர்க்கிமிதேயர் கண்டவிதி, நீர்க்கோட்கருவி.

சுவாமிநாத ஐயர், (தி. அ) எவ். டி. எஸ்.,.—நாடக விலக்கணச் சுருக்கம், பகவத்கீதை, ஹிரண்மயி சரித்திரம், அநுயாதேவி.

சூரியநாராயண சாஸ்திரியார், (வி. கோ.) பி. ஏ.—மான விஜயம், கலங்கரை விளக்கம், தமிழுலகம், அரசிபிரிவாற்றுமை, கையறுநிலை, மதிவாணன் கதை.

செல்வகேசவராய முதலியார், (திருமணம்) எம். ஏ.—முதலாழ்வார்கள் வைபவம்.

சொக்கலிங்கம் பிள்ளை, (ஸி. எஸ்).—கடவுளுண்மை

சோமசுந்தரம் பிள்ளை, (சா.) பீ. ஏ.—மகாராணியவர்கள் மீ... இரங்கற்பா, இந்து ஜனசமூகச் சீர்திருத்த...

தமிழ்ப் புலவர்.—தோத்திரப்பா.

தங்கவேலு முதலியார், (நின்றை).—சோமசுந்தர நாயகர்.

திருமலைக் கொழுந்து பிள்ளை, பி. ஏ.—கல்லாட வாராய்ச்சி.

நீலமேக சாஸ்திரிகள், (பிரமஸ்ரீ).—பௌத்தமதம்.

நூல்நலங் காண்போன்.—சீவக சிந்தாமணி.

பத்திராதிபர்.—விஞ்ஞாபனம், புதுநூற்றுண்டு.

பரிதிமாற் கலைஞன்.—தனிப்பாசுரத்தொகை.

பலராம ஐயர், (என்).—குயில், காணமற் போனதோர் ஒட்டை, திருவிடை மருதூர் கலம்பக வாராய்ச்சி.

பாலசுந்தர முதலியார், (தண்டலம்).—சமய தத்வஞானம்.

பிரணதார்த்தி ஹரசிவன், பி. ஏ,—சிலப்பதிகார வாராய்ச்சி.

முத்தைய முதலியார், (செய்யூர்).—கல்விச் செல்வம்.

முருகேச முதலியார், (தி. மே).—ஜெயகாந்தன்.

வரதாசாரியர், (சருக்கை).—வாழ்க்கைப்பயன்.

வாசுதேவைய பந்துலு, (ஜ. ப).—மதுரைத் தமிழ்ச்சங்கம்.

வேதாசலம்பிள்ளை, (நாகப்பட்டினம்).—வேனிற்பாட்டு.

ஸ்ரீநிவாச ஐயங்கார், (து. ரா.) பி. ஏ. ருக்மணி சரித்திரம், மகாதேவ கோவிந்த ரானடே.

ஸ்ரீரங்காசாரியர், (தி. கோ).—இராமாநுஜாசாரியர் சரிதம்.

# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900ஞு ஆகஸ்டுமீ 20உ {நே. 1.

## விஞ்ஞாபனம்.

திருந்திய தமிழமு தருந்துநன் மாந்தர்காள்!

யாம் சென்ற மூன்றுவருடங்களாக ஞானபோதினி யென்னும் இவ்வுயர்தரச் செந்தமிழ்ப் பத்திரிகையைப் பற்பல விடையூறுகளி னிடையினுங் கைசோரவிடாது நடத்திவந்தோம். இப்பொழுது நான்காம்வருட ஸம்புடமுந் தொடங்கியிருக்கின்றோம். இச்சஞ்சிகைகளிலெல்லாம் நல்விஷயங்கள் எழுதி நன்மை புரிந்த நல்லறிவாளர்க்கும் சந்தாத்தொகை யளித்துப்பத்திரிகை பெற்று வந்த நண்பர்களுக்கும் மனப்பூர்வமாக வந்தன மளிப்பதோடு அம்மாட்சியுடையார் தமது போதத்தையும் ஆதரவையும் நாளும் உதவல் வழுவார் என்னுந் துணிவுடையேமாயினேம்.

சென்ற வருஷத்திய ஸம்புடத்தை நோக்குவார்க்கு இத்தகைய உபகாரம் இவ்விதத்தில் உலகிற்குச் செய்யப்பட்டதென்பது விளங்கும். கடவுளுண்மை, வானம்பாடி, மல்லிகை மாதவர், வாழ்க்கைப்பயன், நூல்விழைவு, பேக்கனர் சிற்றுரை, தேசாபிமானி, பாரதஸாரம் முதலியன ஆங்கிலமொழியிலுள்ள பிரபலகவிகள் பிரபலவசனங்கள் என்றிவற்றின் மொழிபெயர்ப்பாம். காதம்பரி, முத்திராராட்சசம், விக்கிரமோர்வசி நாடகம், சாந்திவிலாசம் முதலியன ஸம்ஸ்கிருத பாஷையினின்றும் மொழிபெயர்க்கப்பட்டன. கடற்கரையுலா, தாமரைத்தடம், திருப்பரங்கிரிக் குமரன்தாலாட்டு, பெண்கல்விக்கும்மி முதலியன ஸ்வயமாக யாக்கப்பட்ட அருமைச் சிறு

பிரபந்தங்களாம். இவையன்றித் தமிழ்க்கவிசரிதம், நக்கீரனார் தெய்வப்புலமைமாட்சி, சிலப்பதிகார ஆராய்ச்சி முதலிய தமிழ்க்கலை விளக்கங்களும், மதிவாணன் கதை, கமலினி முதலிய விநோத கதைகளும் எழுதப்பட்டன. இன்னும் பலவுள. விரிக்கிற்பெருகும். விஷயத்தொகுதியை யுற்றுக்கவனிப்போர் நீதிசாரம், ஞானோபதேசம், லௌகிகமுறை, சுவைதருகதை, நவீனசாஸ்திர போதம் என்னும் பலவகை வகுப்புக்களுள் ஒவ்வொன்றும் நமது பத்திரிகையில் இடம் பெற்றனவென் றறியாமற்போகார்.

ஆயினும் செய்தன வொழியச் செய்யற்பாலன உளவென்பதை மறுக்கின்றோமல்லம். முதலாவது, விஷயங்கள் இதுவரை கடின நடையும் எளிய நடையுங் கலந்த தமிழ் நடையில் எழுதப்பட்டு வந்தனவாகலின் சில விஷயங்கள் பெண்கள், பாமரர், சிறுவர் என்னும் எண்ணுட்பட்ட சிலர்க்குப் பயன்படாவாயின. இனி வருவனவெல்லாம் இலக்கண வழுவில்லாத எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதப்படல்வேண்டு மென்பதே எமது கொள்கை. இதனை விஷயதானஞ் செய்பவரெல்லாந் தயைகூர்ந்து கவனிப்பாராக. மாறுபடு மிடங்களில் பத்திராதிப சுதந்திரம் பாராட்டித் திருத்தங்கள் செய்யப்படும்.

இரண்டாவது, தமிழ்ப்புலவர்கள் சரித்திரங்கள் பலபல நூல்களிற் சிதறுண்டு கிடக்கின்றன. ஐதிகங்களாகவும் வழங்குகின்றன. அவற்றையெல்லாங்கூட்டிப் பொய்களைந்து காலநிர்ணயம் சரித்திரநுட்ப மென்றிவற்றோடு வெளியிடுதல் அத்தியாவசியகம். தஞ்சை, கழுக்குன்றம், சிராப்பள்ளி, காஞ்சி முதலிய இடங்களில் அகப்பட்ட சிலாசாஸநம் முதலியவற்றினால் சோழராஜகுலபரம்பரை சோழநாட்டின் முற்காலஸ்திதி யென்றின்னவையறுக்கப்பட்ட வரை ஆங்கிலத்தில் தோன்றியிருக்கின்றன. அவற்றைத் தமிழ்மாட்டு அபரிமித ஆசையுடையாரும். பி-ஏ., எம்.ஏ., பரீக்ஷைகளுக்குச் சரித்திரபாடங்களிற் பிரவேசிப்போருமே ஏகதேசமாய்க்காணும் மதுகை யடைகின்றனர். அவற்றின் ஸாரமாயினும் தமிழ்மொழியிலெழுதப்படின் மிக்கநன்மையுண்டாம். மற்று, இதுவரை தோன்றியநூல்களின் விபரங்களும் அவற்றுள்

இது கொள்ளற்பாலது இது தள்ளற்பாலது என்னும் விவேகவு ணர்ச்சியும் போதிக்கப்பட்டிலது. அன்னதொன்று வெளியாதல் அநேகர்க்குப் பயன்தரும். சைவசமயம், வைணவசமயம், வேதாந் தம், கிறிஸ்தவமார்க்கம், மகம்மதியமார்க்கம், பௌத்தமதம், சமண மதம், என்பவற்றின் சாரங்களும் சுருக்கியெழுதப்படல்வேண்டும். உடலுறுபிணிகளை நீக்குதற்குமேற்புலத்தோர் நூதனமாய்க்கண்டு பிடித்த *வசிகர நித்திரை முதலிய பிரயோகங்கள், உயிருறுபிணி யைத் தொலைத்தற்கு அவர் மேற்கொண்ட ஞானசாதன முறை கள் முதலியன தமிழ் மாந்தர்க்குத் தெரிந்திருப்பின் அஃ தோர் அற்புதமாயிருக்கும். இவ்வாறே, செய்யற் பாலன வற்றை வகுப்பான் புகின் அளவின்றி விரியும். இவற்றை ஒருவரு டத்திலோ இரண்டு வருடத்திலோ செய்து முடித்தல் கூடாத காரி யம். எனினும், எழுதுதற்கு ஊக்கமிக்க பண்டிதர்களும், பத்திரி கையைவிடாது-வேண்டுமாயின் இதனையே வாரந்தோறும் பிரசு ரித்து-நடத்தற்குப் பொருளுதவியும் இருப்பின் எத்துணைக் காரிய ங்களும் முடிக்கக்கருத்துக் கொண்டிருக்கின்றோம், காத்துக்கொண் டிருக்கின்றோம் என்பதுணர்த்துமாறு இவ்வளவு தூரங் கூறி னோம்.

தந்நாட்டின் மீதும் தம்மொழியின் மீதும் அபிமான மிக்க செல்வர்கள் பத்திரிகையின் கருத்துக்களை நன்கு சிந்தித்துத் தம் மாலியன்ற பொருளுதவி விஷய வுதவிசெய்து தெய்வத் திருவ ருள்பெற்று வாழ்வார்களாக.

பத்திராதிபர்.

---

## †பாரத ஸாரம்.

### அத்தியாயம். I.

### முகவுரை.

(III-ம் சம்புடம். 454-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

யாதேனுமொரு யுத்தத்தில் குத்துண்டிறந்த குதிரையின் தொகையையும் போர்வீரர்களின் தொகையையும் கவனிக்கும்

---

* Mesmerism. † ADAPTED FROM MRS. ANNIE BESANT'S MAHABHARATA.

போது மிகப் பயங்கரமாயிருக்கிறது. மரணதத்துவத்தைப்பற்றி யோசிக்கும் பொழுது அப்படிப் பயப்படுவதற்கு நியாயமில்லை. மனிதர்களும் மற்றுமுள்ள ஜெந்துக்களும் தாமிருக்கும் தேகம் தமக்கு இனி யிருக்கத்தகாத நிலைமையை அடைகிறபோது அவ்வுடலைவிட்டு நீங்குகிறார்கள். இதைத்தான் மரணமென்றும், மனிதர்கள் சாகிறார்கள் விலங்குகள் சாகின்றன என்றும் நாம் சொல்லிக்கொள்கிறோம்.

இவ்வுடலம் விழுந்தபிறகு அதிலிருந்த ஆத்மா தான்செய்த இருவினைக்கேற்ப முன்னிருந்த தேகத்திலும் சிறந்ததோர் தேகத்தையாவது இழிந்ததோருடலையாவது தனக்கிருப்பிடமாகக் கொள்கிறது. நாம் தரிக்கும் அங்கி நாம் வளர வளர நமக்கு அளவு சரிப்படாது கிழிந்துபோவதுபோல் நமதுடம்பும், வளரும் ஆத்மாவுக்குச் சரிப்படாது போம்போது உடைந்து போகின்றது. மரணத்துக்கு அதிபதியான கூற்றுவனைக்கொடியவனென்று எண்ணாது நமக்கு நன்மை நாடுபவனாகவே எண்ணல் வேண்டும். ஏனெனின் இருந்த உடலிலேயே அழுகச்செய்து ஆத்மாவை உபத்திரவஞ்செய்யாது தக்ககாலத்தில் ஆத்மா விருத்தியாகும்படி விடைகொடுக்கின்றானாதலின். இப்பெரும் பாரதயுத்தத்தில் மாண்டோர் பலர் சுவர்க்கத்தில் மாட்சிமை பெற்றார்.

ஈசுவரனுடைய இச்சை நிறைவேற்றுவதுதான் மற்றெல்லாத் தெய்வங்களுடைய வேலையும். அவ்வீசுவரன்தான் பிரமன், விஷ்ணு, ருத்திரனென்று சொல்லப்பட்ட திரிமூர்த்தி ஸ்வரூபமாயுள்ளவர். பிரபஞ்ச முழுவதும் தம் ஸ்வரூபத்தை யடைய வேண்டுமென்பதுஈசுவரனுடைய இச்சை. அவ்விருப்பத்தைநிறைவேற்றுவதற்காகத்தான் மற்றதேவதைகள் பாடுபடுவதேயன்றி தத்தம் சுயநன்மையைக் கருதியன்று. இத்தேவதைக ளெல்லாம் தமக்கென ஒன்றின்றிப் பகவானுடைய விருப்பத்தைச் செய்து முடிக்கவேண்டி யிருத்தலின் இவர்களுடைய கடமைக்கும் மனிதர்கள் தாம் நடக்கவேண்டிய முறைமைக்கும் வித்தியாசமுண்டு. தேவதைகள் மனிதர்களைப் பரீக்ஷிக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் இவர்கள் போம்வழியிற் கஷ்டங்களையுந் துன்பங்களையும்

உண்டாக்கி விடுகிறார்கள். அவர்களெப்படிச் செய்வது, இவர்களிதற்கெல்லாம் பயப்படாமல் தைரியமுடையவர்களாய் அதிக பலமும் நல்லறிவும் வாய்த்து நேரியவழிக்குவரவேண்டுமென்பதேயன்றி வேறோரெண்ணத்தினாலன்று. இவ்விஷயத்தில் தேவர்கள் செய்யத்தக்கன மனிதர்கள் செய்யத்தகாதன. ஏனெனின் நியாயாதிபதி குற்றஞ்செய்தவொருவனைத் தண்டிக்கிறான்; அவன் தண்டனை செய்யும்போது நாம் ஏன்செய்யலாகாதென அக்குற்றவாளியை நாம் தண்டித்தல் தகுமோ? தகாது. ஒருவன் ஒருபொருளைத் திருடினால் அத்திருடனை அதற்காகக் காவற்சாலையி லடைக்கிறார்கள். களவாடியபொருள் உன்னுடையதா யிருந்தபோதிலும் நீயவனை அப்படித் தண்டித்தலாகுமா? நீ அப்படிச்செய்தால் அது பிழையெனக் கொள்ளப்படும். பிழையெனக் கொள்ளப்படுகிறவைகள்ஏன் அப்படி எண்ணப்படுகின்றன? சுயகாரியம் சுயேச்சை அல்லது அகங்கார மமகாரம் என்னுமிவற்றை நாடிச்செய்தலின். ஒருவன் ஆண்டவன் ஆக்ஞைப்பிரகாரம் செய்யாது தன்னைத் திருப்திசெய்துகொள்ளும்பொருட்டு தன் மனம்போனவாறு நடப்பானாயின் அவன் செய்யுங் காரியமும் அநேகமாய்ப்பிழையாகவே முடிகிறது.

எந்த ஜாதியாயினும் நன்மார்க்கத்தை விட்டுத் துன்மார்க்கத்திலேயே சென்றுகொண்டிருந்தால் அவசியம் அதிகத் துன்பத்தை யடையுமென்னும் உண்மையானது பாரதத்தை வாசிப்பதனாலும் நன்கறியக் கூடியது. இப்பலனை அடையும்படிசெய்து வருவனவும் தேவதைகள்தாம். இந்தியர்களுக்குப் பூர்வீகமிருந்ததுபோலவே நற்குணமும், சுத்தமான இருதயமும், தெய்வபக்தியுந் திரும்பிவந்தால்தான் இந்தியாவிற்கு முன்னொரு காலத்திருந்த சம்பத்தும், பலமும், சுயேச்சையு முண்டாகும். இதைத் தவிர வேறொருவழியுங் கிடையாது. எந்த ஜாதியாரும் பெருமை சிரேஷ்டம் இவைகளை யடைவது அவர்களுடைய சற்கருமத்தின் பலனேயன்றி வேறில்லை. ஒரு ஜாதியார் தகாதன செய்துகொண்டு வருவார்களாகில் அவர்களுடைய பெருமையும் தாழ்ந்துகொண்டே வரும். எந்தஜாதியார் தகுந்தனவற்றைச் செய்துகொண்டு வருகிறார்களோ அவர்கள் பெருமையிலும் வளர்ந்துகொண்டே வருகிறார்கள்.

ஒரு ஜாதியில் ஒரு பெரியமாறுதல் உண்டாகிறதற்குத் தக்க காலம் வரும்போது அந்த ஜாதியில் பெரியவர்கள் தோன்றுகிறார்கள். அத்தகைய காலம் இந்தியாவிற்குச்சுமார் ஐயாயிரவருஷத்திற்குமுன்வந்தது. இத்தருணத்தில் இதற்காகப் பிறப்பவர்களிற் சிலர் நற்குணத்திற் பெரியவரா யிருக்கிறார்கள்; சிலர் தீக்குணத்திற் சிறந்தவராயிருக்கிறார்கள். அந்தந்தச் சாதியார் கிருதார்த்தராவதற்கு இத்தகையர்கள் பிறக்கவேண்டியிருக்கின்றது. இவர்கள் இத்தருணத்தில் இவ்வேலைக்கென்றே,முன்ஜன்மங்களிலேயே தங்களைச்சன்னத்தஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். நற்குணத்திற் பெரியவருக்கும் தீயகுணத்திற் சிறப்புற்றோருக்கும் இதுதான் முதல் ஜன்மமென்பது வேண்டுவதில்லை. நல்லவர்கள் தேவதைகளுக்குத் தக்கதருணத்தில் இப்பூமியில் வந்து பிறந்து உதவி புரியவேண்டியதுபற்றி முன்ஜன்மத்தில் நலத்தையே நாடி அதிகமாய்த் தேடிச் சம்பாதித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். துஷ்டர்களிற் சிறந்தோரும் முன் ஜன்மத்தில் வேண்டிய துர்க்கிருத்தியஞ்செய்து அதற்குப் பலனாக இத்தருணத்திற் பிறந்து, கடவுளரும் நற்குணமுடையாரும் செய்வனவற்றிற்கு விரோதமானவைகளையே செய்துகொண்டு வருவதனாற் கஷ்டங்களை விளைவித்துக் கொள்கிறார்கள். அப்போது அந்த ஜாதியார் தாம்போய்க்கொண்டிருந்த வழி தவறென்று தெரிந்து நன்மார்க்கத்தை நாட ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். நல்லவர்களும் தீயவர்களும் தங்கள் வினையைத் தாங்களே யாக்கிக்கொண்டு அப்படியானவர்கள். நல்லவர் தேவதைகளுக்கு உதவியும் தீயவர் அவர்கள் செயலுக்கு விரோதமும் செய்துகொண்டு வருகிறார்கள். ஒருவரைத் தாழ்த்தியும் ஒருவரை யுயர்த்தியும் வைக்கவேண்டு மென்ற எண்ணமோ கடவுளுக்கில்லை. மனிதர்கள்தாம்தம் வினைப்பயனின்படிவரவேண்டிய இடத்திற்கு தேவதைகள்அவர்களைச் செலுத்தவே அவர்கள் அதில் வந்து பிறக்கிறார்கள்.

முதற்பருவமாகிய ஆதிபருவத்தின்கண் பாரதயுத்தத்தின் பொருட்டுச்சுவர்க்கத்தில் நடந்த ஏற்பாடுக ளின்னவென்று எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இதற்காகத் தேவர்களெல்லாம் ஒருங்குசேர்ந்து யோசனைசெய்தார்கள். யுத்தத்தை நடத்தும்பொருட்டுச் சிலர் பூமியிற்போய்த் தலைவராகப் பிறக்கவேண்டியதற்கு

நான்குபேரை நியமித்தார்கள். இந்நால்வரும் முன்னொருகாலத்து இந்திரரா யிருந்தவர்கள். தேவர்களுடைய அரசனுக்கு இந்திரனென்றும் தேவேந்திரனென்றும் அநேகபெயர்கள் உண்டு. அப்போதிருந்தஇந்திரன்சற்றே கர்வம் அடைந்திருக்கவே அஃது அடங்கு நிமித்தம் அவனுடையபட்டம்சிலகாலம்வரையில் நீங்கும்படி சர்வேசுவரன் செய்துவிட்டார். இந்திரனைப்பார்த்துக் கோபித்து 'உன்னைப்போன்று மமதை உடையவர்கள் என்னுடைய கிருபைக்குப் பாத்திரராகார்கள்' என்றுசொல்லி, 'நீயும் இன்னும் உனக்கு முன்னிருந்தநான்குஇந்திரர்களும்பூமியிற்போய் மனிதராய்ப்பிறந்துநான்சொல்லுங்காரியத்தைமுடித்துமறுபடியும் சுவர்க்கம்வந்து சேரலாம்' என்றார். இவர்களில்நால்வர்ஈசுவரனைப்பார்த்து "நாங்கள் மானிடகர்ப்பத்திற்பிறந்தபோதிலும்தேவதைகள் எங்களுக்குத்தந்தையரா யிருத்தல்வேண்டும்" என வேண்டிக்கொண்டார்கள். ஐந்தாவ திந்திரன் தனக்குப்பதிலாகத்தன்னிட மிருந்து ஒருவனை உற்பத்திசெய்து இதன்பொருட்டு விடுவதாகச்சொல்லவே அதையும் அங்கீகரித்தார். தக்கதருணம் வந்தபோது நான்கிந்திரர்களும் தர்மர், பீமன், நகுலன், சகாதேவன் என்பவர்களாகப் பிறந்தார்கள். யமதர்ம இராஜாவுக்குப் பிறந்தவர் தருமர்; வாயுவினுடைய புத்திரன் பீமன்; அசுவினி தேவதைகளுக்குப் பிறந்தவர்கள் நகுல சகாதேவர்கள். அருச்சுனனோ முன்ஜன்மத்தில் நரன் என்னும் ஒரு பெரிய இருஷியாயிருந்து அப்போதிருந்த தேவேந்திரனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவன். இவ்வைவருடைய சரித்திரம் தான் மேலத்தியாயங்களிற் கூறப்படும். இவர்கள்தாம் பாரத யுத்தத்தில் ஜயம்பெற்றுப் பயனடைந்தவர்கள்.

இந்த யுத்தத்திற்குப் பிறகு வேறுயுகம் பிறக்கவேண்டியிருந்தலின், ஸ்ரீமகாவிஷ்ணுவும் கிருஷ்ணனென்னும் நாமதேயத்தோடு அவதாரஞ்செய்தார். தன்னுடைய ஆதிசேஷனையும் உடன் கொண்டுவந்தார். இவருடைய தமையனார் பலராமர்தான் ஆதிசேஷாம்சம். உலகம்தான்போகவேண்டியநன்மார்க்கத்தினின்றுந் தவறித் துன்மார்க்கத்திலேயே அதிகமாய்ப்பிரவேசித்துப்பாபங்களுந் தீமைகளும் அதிகரித்துப் பூமிதாங்காத நிலைமைக்கு வந்துவிடுந்தருணத்தில்தீமையையொழித்துநன்மையைநிலைநாட்டும்வண்ணம்சர்வே

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41



சுவரனே பூதவுருவங்கொண்டு இங்குப் பிறப்பதுண்டு. இப்பிறப்பிற்குத்தான் அவதாரம் என்றுபெயர்.

பரதனுடைய வமிசத்தாரைக் குறித்துச்சொல்லுஞ் சரித்திரமாகையால் இதற்குப் பாரதமெனப் பெயர். பரதன் துஷ்யந்த மகாராஜாவுக்குச் சகுந்தலையினிடமாகப் பிறந்தவன். "மஹா" என்பது "பெருமைபொருந்திய" என்றும்; "பாரதர்" என்பது 'பரதவமிசத்தார்' என்றும் பொருள்படும். ஆகவே "மஹாபாரதம்" என்பதற்குப் பரதவம்சத்தாரைக் குறித்துச் சொல்லும் சரித்திரமென்பது பொருள். இவ்வமிசத்திற் குரு வென்னும் ஓர் அரசனிருந்தான். அவன்தான் சந்நியாச ஆசிரமத்தை அதிகமாய் வகித்தவன். அவன்தானிருந்து ஜப தப யாகமுதலியவற்றை நிறைவேற்றிய இடத்திற்குக் குருக்ஷேத்திரமென்று பெயர். இவ்விடத்திற்றான் பதினெட்டுநாள் யுத்தமும் நடந்தது. குரு சந்ததியாரில் மூன்று சகோதரர்க ளிருந்தார்கள். அவர்களில் மூத்தவனுக்குத் திருதராஷ்டிரனென்று பெயர். அவனே பிறவிக்குருடன். அவனுடைய பிள்ளைகள்தாம் பாரதயுத்தத்தில் தர்மமில்லாப் பக்கத்திருந்து யுத்தஞ்செய்தவர்கள். இரண்டாவது பிள்ளைக்குப் பாண்டுவெனப் பெயர். பாண்டுவின் புத்திரர்தாம் திருதராஷ்டிரனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாய்ச் சண்டைசெய்தவர்கள். மூன்றுவது பிள்ளைக்கு விதுரனென்று பெயர். இவன் மிகவும் சன்மார்க்க நெறியிலிருந்தவன். இராஜ்ஜியத்தி லுயர்ந்த வேலையி லிருந்து கொண்டிருந்தான். இவர்களுடைய சரித்திரத்தைக்குறித்துத்தான் பதினெண்பருவங்க ளெழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பருவத்து முரைக்கப்படும் முக்கியவிஷயத்தை நோக்கி அவ்வப்பருவத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளன.

இச்சரித்திரம் நைமிசாரண்ணியத்தில்சௌனகாதி முனிவர்களுக்கு உரோமஹர்ஷணர் என்பவருடைய புதல்வராகிய அக்கிரஸ்ரவர் அல்லது ஸூதபுராணிகர் என்னும் பெயர் பூண்டவராற் சொல்லப்பட்டது. ஸூதபுராணிகர் வியாசருடைய மாணுக்கர். இவர் இந்த இருஷிகளிடம் வந்தவுடன் அவர்களி லொருவர் இவரைநோக்கி எங்கிருந்து எழுந்தருளுகிறீர்களென் றுபசரிக்கவே, ஜனமேஜய மகாராஜா செய்த சர்ப்பயாகத்திற்குப்போய் வருகிறேனென்றுசொன்னர். அவ்விடத்திற்சொன்ன மகாபாரதக்கதையை

த்தானுங்கேட்டு அறிந்தேனென்றார். கிருஷ்ண த்வபாயன வேத வியாசர் என்னும் ருஷியால் இவ்விதிகாசம் செய்யப்பட்டது. கருநிறமுள்ளவராகையாற் கிருஷ்ணனென்றும், தீபத்திற் பிறந்தபடியால் துவபாயனனென்றும், வேதங்களைக் காண்டமுதலியனவாகப் பிரித்தபடியால் வேதவியாசரென்றும் இந்நூலாசிரியருக்குப் பெயர். நைமிசாரண்யத்து ருஷிகளும் விருப்பத்துடன் கேட்கவே இவரும் பாரதர்களுடைய சரித்திரத்தைச்சொல்லத்தொடங்கினர்.

## அத்தியாயம். II. (ஆதிபருவம்).

## பாரதவீரர்களின் இளமைப்பருவம்.

மகாபாரதத்து ஆதிபருவத்தில் எடுத்தெழுதி யிருக்கப்பட்டனவற்றுள் முக்கியமானவைகளிற் சிலவற்றை உற்றுநோக்குவாம். அதிற் பாரதவீரர்களின் வாலிபத்தைப் பற்றியும் அவர்களுடைய மூதாதைகளைப் பற்றியும் உற்றார் பெற்றாரைப் பற்றியும் அவர்களுடைய நிலைமை, அவர்களுடையகல்வி இன்னு மிவைபோல்வன பலவற்றைப்பற்றியும் நாமறியலாம். இதை நாம்வாசிக்கும் போதே மேல் முகவுரையிற் சொன்ன தர்மங்கள் அல்லது விதிகளெல்லாம் எவ்வாறு எவ்வளவு அநுபவத்திற்குக் கொண்டுவரப் பட் டிருக்கின்றன வென்பதையுங் கவனித்துப் பார்க்கவேண்டும்.

இதில் அதிகசிரேஷ்டமானவர் பீஷ்மாசாரியர். ஆரியவம்சத்திற் பெருந்தன்மை பூண்டு ஒழுகியவர்களில் இவர் ஒருவர். இவ்வுலகிலுள்ளவ ரனைவர்க்கும் இவர் ஒழுக்கம் மேல்வரிச்சட்டம் போன்றது. அநேகர் தெரிந்தும் தெரியாதும் விழுகிற பாவங்களில் ஒன்றிலேனும் இவர் விழுந்ததில்லை. அவர் வாழ்நாள் முழுதினும் எந்தக்காரியத்தை எந்தக்காலத்திற் செய்தல்வேண்டுமோ அக்காலத்திலேயே அந்தக்காரியத்தைச் செய்துமுடித்தவர். நடுவு நிலைமைதவறினதேயில்லை. அவரே ஒரு பெரிய உபாத்தியாயர், ஒருபெரிய மந்திரி, புத்திரலக்ஷணம், காவன்முறை, இராஜாங்கதந்திரம் இவற்றில் இவர்க்கு இணையானவர் ஒருவருமிலர். இவர் வாழ்நாளின் ஒவ்வொருபாகத்திலும் தமக்குரிய கடமையைப்பழுதறச்செய்துகொண்டுவந்தார்.

பீஷ்மர் பிறக்க அநேக காலங்களுக்குமுன் தேவலோகத்தில் ஒருதிருவிழா நடந்தது. அதற்கு அநேகதேவர்களும் ருஷிகளும் வந்திருந்தார்கள். அநேக அசுவமேதயாகஞ்செய்து அப்பலத்தினல் அமராவதியை அடைந்த மஹாபீஷ்மனென்னும் அரசனும் அவ்விடம்வந்திருந்தான். நதிபதியாகியகங்கையும் வந்திருந்தனள். இவர்களெல்லோரும் ஒன்ருய்க் கூடியிருக்கும்போது காற்றினல் கங்கையின் மார்பிலுள்ள வஸ்திரம் சற்றுவிலகவே தேவர்கள் இதைக் கவனியாது தலை குனிந்துகொண்டார்கள். மஹாபீஷ்மனென்னுமரசனே அவ்வாறு தலைகுனியாது வணங்காமுடியனுயிருந்தான். அவனெண்ணத்தையுஞ் செயலையுங் கண்ட பிரமாவானவர் இவனைச் சபித்துவிட்டார். அதாவது அதர்மமான சிந்தையினலும் ஒழுக்கத்தாலும் தனக்கு இனிவரப்போகிற துன்பங்களையும் கஷ்டங்களையும் அவர் முன்னதாகச்சொன்னர். [நம்முடைய எண்ணம், செய்கை இவற்றின் பலன்தான் கர்மமெனப்படுகிறது. தேவர்கள் அல்லது ருஷிக ளிடும் சாபந்தான் அப்படி அனுபவிக்கவேண்டிய கர்மத்தை முன்னதாகச் சொல்வது.] இவ்வரசன் கங்கையின் கற்பைப் பங்கப்படுத்துவதற்கு எண்ணங்கொண்டானதலின், சுவர்க்கத்தைத்துறந்து பூமியிற்போய்ப் பிறக்கும்படி ஆக்ஞாபித்தார்; "கங்கையும் பூலோகத்திற் போயிருந்து உனக்கு அதிக துன்பத்தை உண்டாக்குவாள். உனக்கு எப்போது கோபம்வரும்படி செய்கிருளோ அப்போது உனக்கு நானிட்ட சாபந் தீருஞ்சமயம் வரும்" என்று பிரம்மா அவ்வாசனுக்குரைத்தார்.

மகாபீஷ்மன் இவ்வுலகில் திரும்பவும் போய்ப் பிறக்கவேண்டிய நாளும் வந்தது. சந்திரவமிசத்திற் குருலிங்க சங்கமபக்தியுள்ள பிரதீபனென்னு மரசனுக்கு இவன் மகனய்வந் துதித்தான். ஒருநாள் பிரதீபன் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது கங்கையானவள் திவ்யரூபமுடைய ஒரு கன்னிகை யுருவங்கொண்டு இவ்வரசனுடைய வலது தொடையில் வந்து உட்கார்ந்தாள். அவன் கண்விழித்துப் பார்த்ததும் அவள் தன்னை விவாகம்செய்துகொள்ளும்படி வேண்டினள். அவன் அவளைநோக்கி "மருமகளும் மகளும் இருக்கவேண்டிய தித்தொடை; மனைவியிருக்கவேண்டியது மற்றைத்தொடை; நீயிருப்பது வலது தொடையாகையால் உன்னை மருமக

ளாகப் பாவித்தல் வேண்டுமேயன்றி மனைவியாக ஏற்றுக்கொள்ளு வியலாது. வேண்டுமானல் என் மகனுக்கு உன்னை விவாகம்செய் விக்கிறேன்" என்றான். அதற்கவள் "உன் பிள்ளையையே விவா கம் செய்து கொள்ளுகிறேன். ஆனால் உன்புத்திரன் நான் செய் வன நல்லன வென்றும் நல்லன வல்லவென்றும் அறிந்து நடப் பது அருமையாயிற்றே. அதுதான் மனதுக் கொருகவலையா யிருக்கிறது. தகுதியான ஏற்பாடு செய்தால் நலம்." என்று சொல்லிப்போய் விட்டாள். அரசனும் அவன்றன் மனைவியும் செய்த தவவிசேடத்தால் மஹாபீஷ்மனென்னு மரசன் இவர்க் கொரு சற்புத்திரனாக வந்தவதரித்தான். அப்புத்திரனுக்குச் **சந்தனு** வென்னும் பெயரிடப்பட்டது. சாந்தகுணமுள்ளவனு டைய பிள்ளையாதல் பற்றி இவனுக்கு இப்பெயர்வாய்த்தது. சந் தனுவுக்குத்தக்க பருவம் வந்தவுடன் அவனை வரவழைத்து "ஓ சற்புத்திரனே! தெய்வலோகத்திலிருந்தொரு கன்னிகை முன்னொ ருகால் என்னிடம் வந்துபோனாள். அவள் இப்போது வந்து தன்னை விவாகஞ் செய்துகொள்ளும்படி உன்னைக்கேட்பாள். அத ற்கு நீயொன்றும் மறுத்துச்சொல்லாமற் சம்மதித்தல்வேண்டும் அவளுனக்குப் பாரியையானதும் அவள் செய்யுங் காரியம் உன க்கு எப்படித்தோன்றினாலும் அவற்றைக் குறித்து யாதொன்றுங் கேட்காதே. அவளை யாரென்றும், எவ்விடமிருப்பவளென்றும் எவ்விடத்திருந்துவந்தவளென்றும் நீ கேட்கலாகாது. தகப் பனுருடைய ஆக்ஞைப்படி அவளை நீ உன்மனைவியாகப் பெறு வாயாக." என்றான். பிரதீபன் தக்ககாலத்திற் பிள்ளைக்குப் பட் டாபிஷேகம் செய்வித்துத் தான் மான்தோல் மரவுரி சடைமுடி தரித்துத்தவஞ்செய்வான் புறப்பட்டுவிட்டான். அதுமுதல் சந்தனு வும் தன்னாட்டை நன்றாக ஆண்டுகொண்டுவந்தான். ஒருநாள் கங் கையாற்றின்கரையில் தான்உலாவிக்கொண்டிருக்கையில்தேவகன் னிகை ஒருத்தியைக்கண்டு காமுற்று அவளைத்தனக்கு நாயகியாக வேண்டுமென்றுவேண்டினான். அவள்தான் கங்கை. அவள்அவனை விவாகம் செய்துகொள்ளச் சம்மதித்தாள். ஆயினும் அவனை நோக்கி, "என்னுடைய காரியத்தில் தாங்கள் பிரவேசித்தல் கூடாது. இன்சொல்லே யன்றிக் கடுஞ்சொல் கிட்டவே வருதல் கூடாது. என்னைச் சுகமாய் வைத்திருக்கிறவரையில் உம்மோடு

கூடியிருப்பேன். ஆனால், நான் செய்யுங் காரியங்களிற் பிரவேசித்தாலுஞ்சரி கடுஞ்சொல் என்காதிற் பட்டாலுஞ்சரி உம்மை விட்டு உடனே பிரிந்தேகுவேன். இது நிச்சயம்" என்று சொன்னாள். அப்படியே யாகட்டும் என்றுடன்பட்டான் சந்தனுமகாராஜனும். அவர்களிருவருக்கும் மணம் முடிந்தபின் மணமருது பல நாள் மிகுந்த சுகத்துடன் காதலிருவரும் கருத்தொருமித்து வாழ்ந்துகொண்டு வந்தார்கள். முதற்குழந்தைபிறந்தவுடன்கங்கைஅதை யெடுத்துக் கங்கையாற்றிலெறிந்துவிட்டாள். குழந்தையைப்பார்த்து அவள் "இப்படி யான்செய்வது உன் நன்மையை நாடியே" யென்றாள். இரண்டாவது குழந்தைக்கும் அதே கதிதான். மூன்று நான்கு, ஐந்து, ஆறு, ஏழாவது குழந்தையு மிப்படியே மடிந்தது. ஐயோ பாவம்! என் செய்வான் அரசன்? அவன் மனமோ பதைக்கிறது. உடலோ துடிக்கிறது. இவள் நடத்தையோ இது விஷயத்தில் இவனுக்குச் சிறிதேனுஞ் சரிப்படவில்லை. ஆசையென்னு மந்தகாரம் இவன் கண்ணைமூடி யிருந்ததனால் வாய் திறந்து ஒன்றுஞ் சொல்வதற்கில்லை. ஆனால் இவள் காரியமோ பொறுத்து முடியவில்லை. எட்டாவது பிள்ளை பிறந்தவுடன், கங்கையானவள் அதனையும் கங்கையிலெறிய வெண்ணினாள். ஏதாவது சொன்னால் மனைவி பிரிந்துபோய் விடுவாளே என்னும் பயமிருந்தபோதிலும் குழந்தைகளின் கதியை நினைத்து இப்பயத்தைத் துறந்து அவளை நோக்கி "நீ இதைக் கொல்லாதே? நீயார்? குழந்தை யாருடையது? உன்னுடைய குழந்தையை ஏன் இப்படிக்கொன்று கொண்டு வருகிறாய்? கொலைப்பாதகி! இப்பாவங்களுக் கேன் செய்வாய்?" என்றான்.

சந்தனு மகாராஜன் என் செய்வான்! ஐயோ பாவம்! இருதலைக் கொள்ளியின் எறும்புபோல் இருந்தலைந்தான். கடைசியிற் பிதாவின் கட்டளையையும் மறந்தான். அவன் அவ்வாறுசொன்னபோது கங்கை அவனை நோக்கி "இனி உன்னுடைய இந்தப் பிள்ளையைக் கொல்லவில்லை. நம்முடைய உடன்படிக்கைப்பிரகாரம் நானும் உம்முட னிருக்கவேண்டிய காலமும் முடிந்துவிட்டது. நான்தான் கங்கை, ஜந்நு முனிவர் புத்திரியாகையால் எனக்கு ஜாந்நவி யென்று வேறொரு பெயருமுண்டு. எனக்குப் பிறந்த எட்டுக் குழந்தைகளும் அஷ்டவசுக்களேயன்றி வேறல்லர். இவர்

கள் ஒருபெரியஇருஷியினிடமிருந்து நந்தினி யென்னும் காமதேனுவைக் களவாடிப்போய் விட்டார்கள். அவர்களில் தயா என்பவன்தான் இக்காரியஞ் செய்தவன். மற்றவர்கள் இதற்கு உதவி புரிந்தவர்கள். இருஷி மிகவுங் கோபங்கொண்டு எல்லாரையும்'நீங்கள்செய்த பாவத்தின் பலனை அனுபவிக்கும்பொருட்டுப் பூமியிற் போய்ப் பிறக்கக்கடவீர்கள்' எனச் சபித்துவிட்டார். பிறகு அவரைக்கெஞ்சிக் கூத்தாடிக் கேட்கவே மனமிரங்கித் தயா என்பவன் தவிர மற்றவர்கள் உலகினிற் பிறந்த ஒருவருஷத்திற்குள் மானிட உடலம் விட்டு இவ்விடம் வந்துவிடுவீர்களென்றும் தயா மாத்திரம் பூமியி லனேகநாளிருந்து உழன்றபின்பு தான் இவ்விடம் வரலாமென்றுஞ் சொன்னார். பிறகு அஷ்ட வசுக்களும் என்னிடம் வந்து எனக்குக் குழந்தைகளாய்ப் பிறக்கவேண்டு மென்றும், பிறந்த வுடனே தங்களைக் கங்கையி லெறிந்துவிட வேண்டுமென்றும் என்னை வேண்டிக்கொண்டார்கள். மானிடயாக்கையி லிருப்பது சிறையிலிருப்பதுபோ லிருந்தது. இவ்வுலக வாழ்க்கையினின்றும் நிவர்த்திக்கும் வண்ணம் அவர்கள் விருப்பத்தின்படி செய்தேன். சாந்தமும் அருளும் வாய்ந்து அரசசிகாமணியாய் விளங்கும் ஓ சந்தனுமஹாராஜனே! இருஷியின் சாபத்தினால் இவனொருவன் தான் இப்பூமியிற் கொஞ்சகால மிருந்து மறுபடியும் சுவர்க்கமடையவேண்டியவன்" என்று சொல்லி இக்குழந்தையையும் தற்காலம் தன்னுடன் கொண்டு கங்கையானவள் அரசன் கட்புலனுக்ககப்படாது போய் விட்டனள்.*

•சாதற்குச்சனங்கள் சாதாரணமாய்த் திகிலடைகிறார்கள். தேவதைகள் இவ்விடம் வந்து பிறந்திருக்கிறபோது தாங்கள் ஒரு சிறைச்சாலையிலகப்பட்டுக் கொண்டதுபோ லெண்ணுகிறார்கள். மரணத்தை அச்சிறையினின்று தம்மை மீட்கிற ஒரு நண்பனைப் போலப் பாவிக்கிறார்கள். இவ்வுலகினுள்ள நாம் ஒரு குழந்தை பிறக்கும்போது அதிக ஆனந்தக்களிப்பிலாழ்ந்து ஒருவன் இறக்கும் போது சற்றேனும் யோசியாது அறிவீனத்தினால் அழுகையே நம் தொழிலாக்கக் கொள்கிறோம். இஃது எப்படியிருக்கிறதென்றால் நமது சிநேகனைச் சிறையிலடைக்கும்போது ஆடல் பாடல் சங்கீத முதலியவை கூடிய விழாவுடன் விருந்துண்டு,

* ஆதிபருவம் [96 - 99.]

அவனைச்சிறையினின்று விடுக்கும்போது வருத்தத்துடன் அழுதலையு மொக்கும். எப்படி அஷ்ட வசுக்களையும் கங்கையானவள் மானிடதேசமாகிய கூண்டினின்றும் விடுதலை செய்தனளோ அதைப் போலவே ஒவ்வொரு மரணமும்சம்பவிக்கும்போது கடவுளொருவர், அடைபட்டிருக்கும் ஆத்மாவை விடுதலைசெய்கிறார். நமக்கு வருத்தத்தை யுண்டாக்கித் தீங்கு விளைப்பதுபோல் நமக்குப் புலப்படும் விஷயங்களெல்லாவற்றிலும் கருணையங் கடவுளுடைய கைவண்ணத்தைக் காணுமாறு இக்கதை நமக்கு நன்கு தெரிவிக்கிறது. இவர்கள் நமக்குத்தீங்கு செய்வார்களென் றெண்ணுவது நமது அறியாமையேயாம்.

கங்கையானவள் தன்னெட்டாவது புத்திரனைத்தன்னுடன் கொண்டுபோனதாக மேலே சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? அவன் யௌவனபருவமுற்றதும் அவனைச்சந்தனுவினிடம் கொண்டுவந்து விட்டுப்போயினள். சந்தனுமகாராஜாவினிடம் வந்தபோது அந்தப் பிள்ளை நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்து நான்கு கலைகளிலும் மிக்கபாண்டித்திய முடையவனாய்க் காணப்பட்டான். எனவே க்ஷத்திரியருக்குரிய ஆயுதப்பயிற்சி, ஆனையேற்றம், குதிரையேற்றம் முதலியனவற்றிலும் சிறந்த வீரனெனத் தெரியவருகிறது. அவனுடைய பலமும் பராக்கிரமமும் அதிகம். சாஸ்திரஞானம் எவ்வளவு அதிகமாயிருந்ததோ அவ்வளவு சிறப்புற்றிருந்தன அவனுடைய தகப்பனாரிடமிருக்கவேண்டிய பக்ஷமும் பக்தியும். சமயம் வாய்த்தபோது இதை மற்றவர்கள் அறிந்து ஆச்சரியப்படவும் ஆயிற்று.

ஒருநாள் சந்தனு மகாராஜா வேடிக்கையாய் யமுனையாற்றங் கரையில் உலாவிக்கொண்டிருந்தபோது பெண்களுக்குரிய எல்லா லக்ஷணமும் அதிக அழகும் வாய்ந்த ஒருகன்னிகையை அவ்விடங் கண்டு அவளைத் தன் நாயகியாக்கிக்கொள்ள விருப்பங்கொண்டான். அவளோ அழகுவாய்ந்தவளா யிருந்தபோதிலும் இழிகுலத்தவனாகிய மீன்வலைஞனுடைய பெண். அவள் பெயரோ மச்சகந்தி. பரிமளகந்தியென்பது பராசரராற் கொடுக்கப்பட்ட மறுபெயர். இவள் கன்னியா யிருக்கும் போதே இவருக்கு இவளிடமாகப் பிறந்தவர் வேதவியாசர். அவளுடைய தகப்பன் அரசனைநோக்கி "நீ என் குமாரத்தியினிடம் உற்பவிக்கும் புதல்வனுக்கு உனக்

குப் பிறகு பட்டங்கட்டி வைக்கிறேனென வாக்குத்தத்தஞ்செய்தா லொழிய, என்புதல்வி யுனக்குப் பத்நினியாகாள்" என்றனன். முன்னமே இரத்தினம்போன்ற பிள்ளை யொருவனிருத்தலின், தான் அனுபவிக்க விரும்பிய சிற்றின்பத்தின் பொருட்டு அவனை நீக்க எண்ணமில்லாதவனாய் அதிக வருத்தத்தோடும் வீட்டுக்குத் திரும்பினான். தன் தகப்பனார் அதிக வருத்தமுற்றிருப்பதை அவர் முகக்குறிப்பாற்கண்டு, அதிக பக்ஷத்துடன் அதற்குக் காரணம் யாதெனக்கேட்க அவர் தமதெண்ணத்தை இவனிடம் ஒன்றுஞ் சொல்வதற் கில்லாமையால், அவன் அரசனுக்கு அந்தரங்க மான மந்திரியினிடம் சென்று அரசனுடைய மனக்கிலேசத்தை எப்படி நீக்கலாமென்றுலோசித்தான். அம்மந்திரியாரும் மீன் வலைஞனுடைய குமாரத்தியின் விருத்தாந்தத்தைச் சவிஸ்தார மாய்ச்சொல்லவே தேவவிரதனெனும்பெயர்பூண்ட இப்பிள்ளையும் தன்னுடன் சில க்ஷத்திரிய வீரர்களை அழைத்துக்கொண்டு மச்ச கந்தியின் தகப்பனிடம் சென்று "உன் குமாரத்தியாகிய மச்சகந்தி (பரிமளகந்தி, சத்தியவதி)யை அரசன் தன்பத்தினியாக்கிக் கொள்ள விரும்புகிறான். தடையில்லாது கொடுத்தல் வேண்டும்" என்று சொல்லலும், சத்தியவதியின் தகப்பன் தேவவிரதனை நோக்கி அரசனுக்கு இதற்கு முன்னமே ஒரு புத்திரனிருக்கிறான். அவனு க்கு இராஜ்ஜியம் கிடைக்குமேயொழிய சத்தியவதிக்குப்பிறக்கும் புத்திரனுக்குஅஃதில்லாமற்போய்விடுமே. ஆகையினாற்றான் கொடு க்க எண்ணமில்லை யென்றான். அதற்குத் தேவவிரதன் தன்னுடன் கொண்டுவந்தவர்களையும் வைத்துக்கொண்டு மீன்வலைஞர் தலைவ னை நோக்கி "என் சபதத்தைக்கேள். நீவிரும்பிய வாறெல்லாம் செ ய்கிறேன். நான் தான் சந்தனுமகாராஜாவின் பிள்ளை. என்பெயர் தேவவிரதன். இனி என் தந்தைக்கு உன் புத்திரியினிடமாகப் பிறக்கும் பிள்ளையே எங்களுக்கெல்லாம் அரசனாயிருக்கட்டும்" என்று தன் தகப்பனாருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பொ ருட்டுத் தனக்குரிய இராஜ்ஜியத்தையும் எறிந்து விட்டான். இப்ப டிச் செய்தும் சத்தியவதியின் தகப்பன் திருப்தியடையாது தே வவிரதனைப் பார்த்து "நீ உன்வாய்மையை நிலை நிறுத்துவாய் என் பதில் எனக்குச் சிறிதேனும் சந்தேகமேயில்லை. ஒருவேளை உனக் குப் பிறக்கும் பிள்ளைகளும் அப்படியே யிருப்பார்களா வென்பது

தான் சற்றே சந்தேகத்திற்கிட மாயிருக்கிறது" என்றான். அதற்க வன் வலைஞர்தலைவனை நோக்கி "நான் முதலில் இராஜ்ஜியத்தைத் துறந்தேன். புத்திரர்களுடைய விஷயத்தைக் குறித்தும் இப்போதே ஒரு முடிவு செய்துவிடுகிறேன். அதாவது இன்று முதலென்றும் பிரமசாரியாய் இருந்து விடுகிறேன். புத்திரனில்லாமல் யான் இறந்தபோதிலும் நான் புத் என்னும் நரகம் புகாது சுவர்க்கத்தையே யடைவேன். என் தகப்பனாருடைய விருப்பத்தை எப்படியாயினும் நிறைவேற்றினாற் போதும்" என்று சொன்னதும் எல்லோரும் மிகவும் ஆச்சரியமடையவும், தேவர்கள் புஷ்பமாரி பெய்து இவன் தான் பீஷ்மன் இவன் தான் பீஷ்மனென்று ஆரவாரித்தார்கள். ஆம், இவன்தான் பீஷ்மன், இவனை யிப்படிச் சொல்வதற் கோரையமு முண்டோ? மற்றவர்களெல்லாம் எதைத்தும் முயிருக்குச் சமானமாகப் பாவிக்கிறார்களோ அதைத்துறந்து தன் வாய்மையே ஆதிமுதற் கடைப்பிடித்து நிறைவேற்றியவனல்லவா இவன்? எல்லாம் முடிந்த பிறகு சத்தியவதியைப் பார்த்து "அம்மா! இந்த இரதத்தில் எழுந்தருளுக, நமது வீட்டுக்குப்போகலாம்" என்றான். ஏறினதும் தன் தகப்பன் முன்பாகக் கொண்டுவந்து விடவே தகப்பன் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து பிள்ளையைப்பார்த்து,

"தந்தையர்க் குதவு முதவியி னெனக்குச்
சதமடங் குதவினை யுனக்கு
மைந்தருக் குதவு முதவியிற் சிறிது
மாதவஞ் செய்திலை னுதவச்
சிந்தையிற் றுறக்கம் வேண்டுமென் றெண்ணிச
செல்லுமன் றல்லதுன் னுயிர்மேல்
முந்துறக் காலன் வரப்பெறா னென்றே
முடிவிலா வொருவர மொழிந்தான்"

"ஓ! குழந்தாய்! நீ விரும்பினாலொழிய மரணம் உன்னை அணுகாதொழிக. பாவசிந்தை யென்பது சிறிதேனும் இல்லாத சற்புத்திரனே! உன்னுடைய உத்தரவின்பேரில் தான் யமன் உன்னை யணுகுவான்" என்று ஆசீர்வதித்தான்.

(இன்னும் வரும்)

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

## கமலினி.

### அத்தியாயம் - XXI.

" எவ்விடத் தழகு நன்ன ரிசைந்துகட் களிப்புண் டாக்கு
மவ்விடத் தமைந்தி ருக்கு மரியபல் குணமு மன்றே"

மனிதர்கள் தங்கள் மனத்தைக் கவரும்படியான தன்மையுள்ள பெண்ணைக் காணுங்காலம்வரையுந் தந்தம் மனைவியர்க்கு உண்மையா யிருப்பார்கள். அம்மனக் கவர்ச்சியானது வன்மையதாயின் அதற்கவர்கள் இடங்கொடுக்கிறார்கள். இஃது எவ்வாறிருக்கின்றதென்றால் ஒரு கயிறானது எவ்வளவு பளுவைத்தாங்குமோ அவ்வளவிற்குமேற்படுமேல் அறுந்துபோய்விடு மென்பதைப்போல விருக்கிறது. ஆசை யெப்படி மனிதருக்கோ அப்படியே பொருள் பெண்களுடைய இளகிய மனமாகிய கயிற்றிற்கொரு பளுவாகும். பொருளினால் மேன்மையனான ஒருவனை எத்தகையபெண்ணும் விரும்புவாள். ஆனால் தான் மணம்புரிந்த நாயகனை விட்டு வேறு ஆடவனை அணையநினைக்கும் பெண் அப்பொழுதே உற்பவித்தழியும் மலரினைப்போலும்.

காதல் வனத்தில் மலரும் புஷ்பத்தைப்போலும். அரேபியா தேசத்துத் தாழையைப்போல மலர்ந்ததும் அழிகின்றது. காதலோ வாழ்நாளாகிய ஒருபெரியவனத்தில் மலர்ந்தும் சிறப்பினையிழந்து அழிகின்றது. மேலும் அக்காதல் காற்றுமழைக் காலத்துவானத்திற்றோன்றும் ஒற்றை நட்சத்திரத்தைப்போலும். எவனொருவன் அம்மலரைமுதலிற் பார்க்கின்றானோ அவனுக்கு அம்மலர்தாழ்கின்றது. அவன் அதைப்பறித்துச்செல்லுகின்றான்.

ஒவ்வொரு மனிதனும் பெண்களினெழிலினால் மயங்கிடுவான். பெண்களழகையோ பொன்னினாலடையக் கூடும். முற்காலத்திலுமிக்காலத்திலும் இப்படியே நடந்துவருகின்றது. இவ்வுலகமே ஒருபெரிய சந்தை. அச்சந்தையில் எவன் அதிகவிலை கொடுக்கின்றானோ அவன் அத்தகைய பொருளையுமடைகிறான். ஆனால் அவ்விலை அச்சமயத்திற் கேற்றதா யிருத்தல்வேண்டும். அவ்வளவுதான் மற்றொன்றுமில்லை.

மனைவியினிடத்து மிகவும் அன்புபாராட்டிய வீரமார்த்தாண்டனை விட்டுவிட்டு அரசனிடத்து நட்புப்பாராட்டிய குணவதியின் தன்மையைச் சிறிது ஆராயின் முற்கூறிய விடயங்களின் உண்மை தெற்றெனவிளங்கும். ஒருவன் நன்மையை யடையவேண்டுமாயின் பல துன்பமடையவேண்டும். இது சாதாரணமாக உலகில் நடைபெறுஞ் சட்டமாம். எது வலிமையிற் சிறந்ததோ அது நெடுநாள் இவ்வுலகில் தினமுமுண்டாகும் போரின்கண் வெற்றிபெற்று நீடூழிவாழும் என்று உயிர்நூற் புலவர்கள் கூறுவார்கள். அதன் உண்மையை இச்சந்தர்ப்பத்தில் ஆலோசிப்போமாயின் குணவதியின் ஆசையாகிய வலிமையுடையபொருள் நிலைநிற்கவேண்டுமாயின் பாவச்செயலைச் செய்யத்தான்வேண்டும். நம் வாழ்நாள் முழுவதும் ஒரு பெரிய நீடித்த பாவவாழ்க்கையென்போரின் கூற்று மொருவாறு ஏற்புடைத்தாம். நாம் உயிருடன்வாழ அனேகம் பொருள்களை அழிக்கின்றோம். ஏனெனில் இவ்வுலகில் வலிமையுள்ளதே நீடித்துநிற்கும்.

இத்தகைய மாபாதகத்தை நம்குணவதி எதற்குச்செய்தனள்? பேராசையெனும் கள்வனது தூண்டுதலினாலன்றே! ஆம்! பேராசை யென்பதன் தன்மைதான் என்னை? உயர ஏறஏற வளர்ந்துகொண்டேவரும். அது கணக்கில்லாப் பழுக்களையுடையதோர் ஏணியாமன்றே! அவ்வேணியை யடையவிரும்பிய ஒருவன் அதன் உயரத்தையறிகிறதில்லை. உயரச்சென்றதும் அதற்கு முயரமான இடத்தையடைய மனம் அவாக்கொள்கின்றது. ஒரு கணப்பொழுதேனும் சந்தோஷத்தையடைய விரும்புங்கால் கணக்கற்ற பொருளும் பயனிலவாதல் உண்மையே யன்றோ? அறிவையடைதற்கு ஏதேனும் ஒரு வரையறை யுளதோ? நாம் எவ்வளவு படிக்கின்றோமோ அவ்வளவும் நம் அறியாமையையன்றே விளக்குகின்றது. நாம் பதினாயிரம்வருஷம் உயிருடன்வாழினும் சூரிய சந்திரர் தன்மையையேனும் அன்றி அவைதாம் வானத்தி லிருக்கச்செய்த பொருளின் குணத்தையேனும் அறியவல்லமோ? எப்பொழுதும் பேராசையானது பெருநஷ்டத்தையே விளைக்கும். அதுபோற் குணவதியின் பேராசையானது தீமையை விளைவிக்காம லிராது. கார்காலத்திற் றோன்றுஞ் சூரியனையொப்ப உலகிற்கு அற்பநாழிகையே இன்பம் விளைத்துப்பின்னர்க் கடுமழையை

விளைக்குந்தன்மையை யொப்ப தத்சமயத்தில் இம் மையல் இன்ப
த்தையே விளைத்துப் பிறகு பொறுத்தற்கு முடியாத துன்பத்
தை விளைக்கும்.

மனைவியினிடத்து மட்டின்றி யாசைபாராட்டும் வீரமார்த்
தாண்டனுக்குக் குணவதியை அனேகநாட்கள் விட்டுப்பிரிந்திருத்
தல் மிகவும் வருத்தமே யென்பதைநாம்முன்னமே தெரிவித்திருக்
கின்றோம். ஆம் என்செய்வான்? தன்னிடத்து இதுகாறும் ஒரு
வாறாக நடந்துவந்த மனைவி அரசனை யடைந்தநாள்முதற் பின்
னும் பதின்மடங்கு அவனிடத்தே யன்புபாராட்டி வந்தாள்
தன் நாயகனுக்குத் துரோகஞ் செய்கிறோமே என்று அதற்குப்
பதிலாகப் பின்னும் அதிக அன்பு குணவதி காட்டுகின்றனளோ?
என்னையோ? அன்றி அவனுடன் இன்னுஞ் சில நாட்கள் தாமே
நாம் தங்கியிருக்கப் போகின்றோம்; அதிசீக்கிரத்தில் அரசன்
அவனை நீக்கிவிடுவதாக வாக்களித்திருக்கின்றனனென்றதனாலோ?
அன்றித் தான் மிகவும் அன்புபாராட்டினால் தான் கணவனுக்குத்
துரோகஞ்செய்வது தெரியாமலிருக்குமென்ற எண்ணத்தினாலோ
அவள் அவ்வாறு நடந்தனள். குணவதி இவ்வாறு நடப்பதா
னது வீரமார்த்தாண்டனது ஆசையைமிகுதியும் வளர்த்து அவனை
விட்டுப்பிரிய மனமிலனாய்ச் செய்தது. இராசாங்ககாரியமாக விடி
யற் பொழுதிற் செல்லவேண்டுமாயின் பத்துநாழிகைக்கே மிக
வருத்தத்துடன் செல்லுவான். இவ்வாறு ஒழுகுதலானது குண
வதிக்கே தீங்கை விளைத்தது. எவ்வாறெனின் தன் ஆசைநாயக
னைக் காணாமல் வருத்தமடைதலாம். அவளும் என்செய்வாள்?
கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டது.

குணவதி அரசனைச் சந்தித்து அனேகநாட்களாயின. அர
சன் ஆவலுடன் அவளையணைய எதிர்பார்த்திருக்கின்றான். ஒரு
நாள் மாலை வீரமார்த்தாண்டன் இராசாங்க காரியமாகச் சென்றி
ருந்தான். அப்பொழுது அரசன் குணவதியை யடைந்து ஆத
ரத்துடன் தழுவிக்கொண்டு,

"என் அருமைக்குணவதி! இன்றைக்கேனும் நாம் இன்ப
முடன் இருக்கலாகுமோ?" என்றான்.

குணவதி சும்மாவிருந்தனள். அவள் முகத்தைப் பிரியத்தோடும் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் கன்னங்களைத் தன் கைகளால் மெதுவாகத்தட்டினன். அவளழகை மிகவும் வர்ணித்தான். அவனது வர்ணிப்பானது குணவதிக்கு இன்பத்தை யுண்டுபண்ணிற்று, அவள் தன் அழகில் மிகவும் கர்வமுற்றவளாகலின். அடிக்கடி அவளைத் தழுவிக்கொண்டு சிருங்கார வார்த்தைகள் சொல்லிக்கொண்டிருந்தான்.

"ஏ குணவதி! நீ மிகவும் அழகாயிருக்கின்றனை. சீக்கிரம் அவ்வீரமார்த்தாண்டனினின்றும் உன்னைப் பிரித்துவிடுகின்றேன். உன்னை முழுவதும் என்னுடைமை என்று எம்பொழுது பாவிப்பேனோ? அக்காலமெக்காலமோ?" என்று சொல்லிக்கொண்டு அவளுடைய இரண்டு தோள்களிலும் தன்கைகளை வைத்து முத்தங்கொண்டான்.

"தாங்களிவ்விதம் பிரியம் பாராட்டலானது எனக்குத்துன்பத்தை விளைக்கின்றது, அடிக்கடி தங்களைப் பிரியநேரிடுகின்றதாகலின்" என்றாள் குணவதி.

"ஆயின் நாளைமுதல் வீரமார்த்தாண்டனைச் சிலகாலம் அரண்மனைக்கே வராமலிருக்குமாறு செய்கின்றேன்" என்றான் சத்தியகீர்த்தி.

"அப்படியே செய்யுங்கள்" என்று குணவதி பெருமூச்சுவிட்டுக்கொண்டு சொன்னாள்.

மறுநாள் வீரமார்த்தாண்டன் அரண்மனைக்கு வந்ததும் "சுந்தரன் உதவிஅரண்மனையிற் சிலகாலம்முக்கியமாய் வேண்டியிருத்தலின் நீயே காவலிற் றலைமைபூண்டு இருக்கவேண்டும்" என்றான் அரசன். வீரமார்த்தாண்டன் அவ்வாறு தன் மனைவியைப் பிரிந்திருப்பதற்கு மனமிலனாய் அரண்மனையை விட்டு எங்கேனுமோடிப்போவதாய்த் தீர்மானித்துக் குணவதியுடன் ஆலோசித்தான். அவளுக்கு ராஜத்துரோகம் செய்வதில் மனமிலையென்று உணர்ந்தான்; மிகவும் மனவருத்தத்துடன் வெளியேசென்றான். வீரமார்த்தாண்டன் சுந்தரியை அழைத்துக் குணவதியின் குணத்தைப்பற்றிப் பயமுறுத்தி வினவ அவள் பயங்கொண்டு ஏதோ அரசன் குணவதியிடத்துப் பிரியம் பாராட்டுகின்றான் என்றாள். உடனேகோபத்து

டன் மனைவியை மறுமுறை யோடிப்போகலாமென்று கேட்டான். அவள் மறுத்ததும் தான் இனி அரண்மனைக்கு வருவதில்லையென்றும் அரசனைக்கொலைசெய்தபிறகே வருவதாயும் சபதம்கூறிவிட்டு வெளியே சென்றான். பிறகு குணவதி அரசபத்தினியாயினாள். அரண்மனையிலுள்ளாரெவரும் அரசன் தீயஒழுக்கத்தை யுணர்ந்து மனம் வருந்தி ஏதோ தீங்கு அரசனுக்குச் சம்பவிக்கப்போகின்றதென்று உறுதியாய் நம்பினார்கள். விசையையோ மிகவும் வருத்தமுற்றாள்.

இருபத்தோன்று மத்தியாயம்முற்றிற்று.

சருக்கை-இராமசாமி ஐயங்கார்.

---

## ஆசார விளக்கம்.

நூல்

பொதுவியல்

முதல் அதிகாரம்-இலக்கணம்

சூத்திரம்—5.

ஆசார விலக்கணம்.

உடலுயி ருறுதி யெய்தி யுய்தற்
கின்றி யமையா விடுக்கண் காணு
இன்பிகை யொள்ளிய வெண்ணூ லூக
மநுபவந் தம்மா லமையு மெனத்தேர்
விரும்பத் தக்க வொல்லும் வியனடை
யாசா ரம்மென வறையுநூற் கணமே. (ரு)

இதன் பொருள்.

உடல் உயிர் உறுதி எய்தி உய்தற்கு இன்றியமையா—உடலும் உயிருந் திடனடைந்து வாழ்தற்கு மிக்கவவசியமாயும், இடுக்கண்காணு—(தான் துன்படையா திருத்தலன்றி மற்றையர்க்குந் துன்பத்துக்கேதுவான காரியங்களைச் செய்யாதிருப்பதால்) அன்னியர் துன்பத்தைக்காணற்கேது வல்லாததாயும், இன்பிகை—உடன் மனங்களுக்குச் சுகத்தைத் தருவதாயும், ஒள்ளிய—யாவராலும் விரும்பத்தக்க பரிசுத்தமும் மேன்மையு மானதாயும், எண்ணூலூக மநுபவந் தம்மாலமையுமெனத்தேர்—தெள்ளிய வுணர்வானெழுதப்பட்ட ஐய விபரீதங்கணீங்கிய யாவராலு மதிக்கத்தக்க, நூல், நூலினுண்மை தேர்வான் நுண்ணிய பலநூற் கேள்விகளா னிறைந்தார்க் கெழு

ந்தலுகம்,மையிலறிஞர் மெய்யநுபவம், ஆகியமூன்று மொற்றுமைப்படலால் இஃது பொருந்து மெனவாராய்ந் துணர்ந்ததாயும், விரும்பத்தக்க=மனதுக் கினியதாயும், ஒல்லும்=இயன்றதாயும் உள்ள, வியன்நடை=யாவரும் பாராட்டத்தக்க சிறந்த நன்னடையினையே, ஆசாரம்மென அறைபு நூற்கணமே=ஒழுக்கம் என்று அழகிய நூற்றொகுதி சொல்லும். (எ-று.)

உடற்சுகவலியெனவே மனச்சுகவலியுண்மையின் இரண்டையு மொன்று சேர்த்துரைக்கப்பட்டது.

நினைத்தல் சிந்தித்தல் மகிழ்தலாதி தொழிற்கு மனமே உயிர்க்கு இன்றியமையாக் கரணமாதலானும், சிந்தித்தலாதிய தொழிலில் மனமென வுயிரென்வேறு பிரித்தறியக்கூடாத வபேத முண்மையானும், இங்கு மனத்தை உயிரெனப் பட்டது.

உயிர்க்குக் கரணமாகிய மனத்தை உயிர் என்றது ஆகுபெயர்.

இனி உறுதி என்பதற்கு, அறிவு உண்மையென்ற பொருள்களுண்மையின், உயிர் நல்லறிவு எய்தியுய்தற் கத்திடாவசியகமாகிய நடை(=நன்னூலுணர்ச்சி, நல்லார் புணர்ப்பு, நற்பயிற்சி) எனினும், உயிர்உண்மைநெறி யெய்தியுய்தற் கத்தியாவசியகமாகிய,நடை(=அநித்தியப்பொருளிஃதென விசாரித்தோர்தல் அதிற் பற்றின்மை ஐம்புலனடக்கல் தவம்புரிதல் ஞானமடைதல்) எனினும் பொருந்தும். இவற்றுள் முன்னது பொதுவும் பின்னது ஆத்திகர்க்குமாம்.

பதசாரம்.

**உடல் உயிர்க்குறுதி** :—உடற்குறுதி பயந்து வளரச்செய்வது ஆசாரமெனில், உடற்குறுதி பயந்து வளர்க்கும் மது தூர்மாம்ச பக்ஷணம் பேருண்களிலும் ஆசாரவிலக்கணத்துக் கதிவியாப்தி தோஷம்வரும், அவை உயிர்க்கு (மனதுக்கு) கலக்கம் மதம் சோம்பல்களைத்தரும் ஆகலின் அத்தகையனவொழித்தற்பொருட்டு உடற்குறுதிபயப்பதோடுஉயிர்க்கு முறுதிபயக்கும் என்னுமிலக்கணமுங் கூட்டப்பட்டது.

**இடுக்கண்காணு**:—உடலுயிர்க் குறுதிபயக்கும்சரிதமே ஆசாரமெனில் அந்நியர் உடலுயிர் பொருள்கட் கிடுக்கணிறுதி பயப்பனவாகிய களவு கொலைகளிலும் (அவ்விலக்கணத்துக்கு) அதிவியாப்தி தோஷம்வரும், அக்குறைபா டொழித்தற்பொருட்டு அந்நியர் துன்பங்களைக் கட்புலன் செவிப்புலன்களாலோர்ந்து வருந்தற் கேதுவல்லாத என்ற விசேடணமுங் கூட்டப்பட்டது.

**இன்பிகை**:—அந்நியர் துன்பங்களைக் காணுதற்கேதுவல்லாத அல்லது அந்நியர் துன்பமடைதற் கேதுவல்லாத சரிதமெனில், பொறுமை சோம்பல்களிலு மதிவியாப்தி தோஷம்வரும், அதைத்தள்ளுதற்காகத்தனக்கு இன்பத்தைத்தரும் என்ற விசேடணமுங் கூட்டப்பட்டது.

**ஒள்ளிய:**—தனக்கு இன்பந்தரும் இயல்பினையுடையது ஆசாரமெனில் வியபிசாரம் (களவுப்புணர்ச்சி)பிறர்பொருளையவரறியாது துய்த்தலாதிகளிலு மதிவியாப்தி தோஷம்வரும். அவை யநுபவத்தி லொருவாறு இன்பமாயினும் துய்ப்பானுக்கு உடையான் காணிற்றீங்குண்டா மென்றவச்ச முதலிய விடர்ப்பாடுகளுண்மையானும் அவை நியாயமற்ற ஈனச்செயல்களாதலானும் அஃதொழித்தற்பொருட்டு ஒள்ளிய (குற்றமற்ற, மேன்மையான்) என்ற விசேடணமுஞ் சேர்க்கப்பட்டது.

**எண்ணூலாகமநுபவந்தம்மாலமையுமெனத்தேர்:**— மனதுக்கு ஒள்ளியதானது ஆசாரமெனில் மதுபானங் கட்குடிப்பார்க்கொள்ளியதாயும், மதவிருத்திக்காகக் கொலைசெயல் எச்சிலுண்ணல் ஒரு சமயிக்கொள்ளியனவாயும், பகலுறக்கஞ் சோம்பலுடையார்க் கொள்ளியதாயும், மனிதரைக் கோறல் நரமாம்ச பக்ஷிணிகட்கொள்ளியதாயும், களவாடல் திருடர்க்கொள்ளியதாயும், அசுத்தாகாரங்கொளல் துராசாரமுடையாற் கொள்ளியதாயும் புழுவையருந்த லொருநாட்டார்க் கொள்ளியதாயும் இருக்கின்றன. ஆகலினவற்றிலு மதிவியாப்தி தோஷம்வரும், அது நீக்கும் பொருட்டு ஒரு விஷயம் பற்றி யாவராலு மதிக்கப்பெற்ற நூலின் சித்தாந்தமும் (சுருதி,) நுண்ணுணர்வினர் யுக்தியும், குற்ற மற்ற வநுபவமும், ஆகிய மூன்றனு மிஃது பொருந்தும் எனத்தெளிந்த என்ற விசேடணமுங் கூட்டப்பட்டது.

உதாரணமாக. வாமமதஸ்தர்மதுபானஞ்செய்தல்மிகச்சிறந்த புண்ணிய காரியமென்று கூறுகின்றனர். அம்மதக்கிரந்தங்களும் அஃது ஒள்ளிய செயலென்று கூறுகின்றன. வாமநூல் பூர்வபக்ஷமாதலால் அதனைக் கண்டித்து மதுபானந் தீய வினைச்செயலென்று வேதங் கூறல் அறிஞரனைவரு மொப்பத்தக்க நூல். மதுக்களில் பித்தத்தை யதிகரிக்கச்செய்யும் ஒருவித விஷச்சத்துண்மையால் நாளாவிருத்தியில் மூளையின் றெள்ளியவுணர்விற் காதாரமாகும் சத்தைக்கெடுத்து அறிவிற்குப் பேதத்தை யுண்டாக்குவதன்றிப்பல தீங்குகளுக்கு மேதுவாமெனல் ஊகம். அநேகர் மதுபான மிகுதியாற் றமது நிலைமைகளை மறந்து தடுமாறி நடத்தல்,இலகிரியில் மனம் பயின் றஃதின்றிச் சற்று நேரமுமிருக்கக்கூடாதவராய்க் குடித்துழலல், தமது சொத்துக்களை மதுபானத்திலிழந்து தரித்திரராதல், மதுபானத்தின் மிக்க பழக்கத்தால் ஆகாரங்கொள்ளுதலின்றிச் சரீரமுலர்ந்து பலஹீனமடைந்து புத்தி நன்னிலையிலின்றிப் பிதற்றி மரணமாகிய பலனையடைதல், அன்னவரை யனைவரு மெள்ளல், அன்னவர் நன்மை தீமையறியாது மயங்கல், என்றிவை யநுபவம்.

இலிங்கபுராணம் அத்தியாயம்-87. "தீம்புனல் வடித்ததையல்லாலேத மற்றொழியக் குடித்திடலாகா" ஷை அத் - 76. "வடியா தெடுக்கினுண் புழுக்கள்கொலையுறும்", நன்னெறி "தண்ணீர் நிலநலத்தால்-அற்புதமாம்" முதலிய வாக்கியங்களால் சுத்தமான நல்ல நிலத்திலூறிய புழுக்கணீங்க

வடிக்கப்பெற்ற இனிய சுத்தஜலமே பானஞ்செய்யத்தக்கது என்பது சுருதி. சுக்கான்கற்பூமி ஊசரபூமிகளி லூறுநீர் அவ்வச்சத்துக்களோ டுண்மையானும், குப்பைமலம் அழுகல்க ணிறைந்த குட்டம்கேணி நீர் அங்குண்டா மழுகலனுக்கள் அணுக்கிருமிகளோடுண்மையானும், அசுத்தநீர் அருந்தினல் அநேக ரோகங்க ளுண்டாமென்று நூல்களானு மறிந்தாராலுங் கேள்விப்படலானும், புத்திக்கு மங்கனமாமெனத் தோன்றலானும், * அறுவகை வடிப்பில் உசிதமான வடிகொண்ட வடியலையருந்தல் தேகசுகாதிக் கேதுவா மென்றநுமானித்தோர்தல் ஊகம். சுக்கான் கற்பூமியி லூறிய ஜலம் வெகுநாட் குடித்தார்க்குக் கல்லடைப்பு அல்லது கபக்கட்டும் சின்னாளருந்தினர்க்கு நீர்க்கடுப்பும், ஊசரநீரருந்தினர்க்கு இரத்தக்கடுப்பும், அழுகல்கலந்த நீரருந்தினர்க்கு ஜ்வரம் பெருவயிறு நீராமையும், கிருமிகலந்த நீரருந்தினர்க்கு பேதிமந்தமும் உண்டாவது அநுபவம். அவ்வநுபவமுணர்ந்தார் மெய்ம்மொழியும் அவையுரைத்த நூலும் அத்தன்மை யனவேயாம். இம்முத்திறத்தும் பொருந்தும்விடயம் இரு கக்ஷிபார்க்கும் ஒப்பத்தக்கது என்பது தெளிவு. அதனைத் தாயுமானவர் "ஊகமநு பவவசன மூன்றுக்கு மொவ்வுமீ துபயவா திகள்சம்மதம்" எனக்கூறி யருளியதானு மோர்க.

**விரும்பத்தக்க**:—எண்ணுாலுக மநுபவர் தம்மாலமையுமெனத் தேர்ந்தையே ஆசாரமெனில், நூலுக மநுபவங்களுக்கு ஒருவனே உபகரித்துக் காத்தல் நற்செயலெனல் ஒத்ததேயாயினும் குழியில் விழுந்துகிடக்கும் அழுகுநீரோடும் விரணகுஷ்டரோகம், தொத்துரோகங்களையுடைய அசங்கியமானவனைப் பரிசித்தெடுத் துபசரித்தலிலும், பெருச்சாளி, அண்டங்காக்கை மாம்சபக்ஷணங்களிலும் அதிவியாப்திதோஷ முண்டாம், அதனை யொழித்தற்பொருட்டு மனோக்யமாயு மிருக்கத்தக்க வென்னும் விசேடணமுஞ் சேர்க்கப்பட்டது.

**ஒல்லும்**:—விரும்பத்தக்க சரிதமே யாசாரமெனில், பேருண் பேராசையா லதியுண்ணப்பு, மிகுபோகம் முதலிபவைகளிலும் அதிவியாப்தி தோஷ முண்டாம், அஃதொழிதற்பொருட்டுப் பொருந்திய அல்லது இயன்ற என்ற விசேடணமுஞ் சேர்க்கப்பட்டது.

கருத்து.

ஆசாரம் என்பது உடலுயிர் உறுதியடைந்து வாழ்தற் கத்தியாவசியகமாயும், மற்றையர் தன்பத்துக்கேதுவல்லாததாயும், இன்பந்தருவதாயும், ஒள்ளியதாயும், தெள்ளியநூல் யுக்தி யனுபவங்களாற் சிறந்ததென்று தீர்மானிக்கத் தக்கதாயும், யாவரானும் விரும்பத்தக்கதாயும், இயன்றதாயும்,

* அறுவகை வடிப்பு=கலைவடி, கல்வடி, கரிமண்வடி, கதிர்வடி, கனல்வடி, தெளிவடி.

உள்ள சிறந்த நல்லொழுக்கமாம் என்று நூற்றுருகுதிகூறும். எனவே ஆசாரமென்பது உடலுயிர் திடனிழந்து கெடுதற்கேதுவாயும், அந்நியர்க்குத் துன்பம் விளைவிக்கத்தக்கதாயும், துன்பந்தருவதாயும், ஈனமானதாயும், தெள்ளியநூல் யுக்தி யனுபவங்களுக் கொவ்வாததாயும், அருவருக்கத்தக்கதாயும் உள்ள துராசாரத்துக்கு மறுதலையான யாவராலும் பாராட்டத்தக்க நல்லொழுக்கமென்று கொள்ளக்கிடந்தமை காண்க.

(இன்னும்வரும்.)

விருதை-சிவஞானயோகி.

---

## சந்தான குரவர்.

ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த வாராவின்பத் தருங்கனி பிழிந்த சாரங்கொண்ட சைவசித்தாந்தத்தைத் தமிழுலகெல்லா முய்யுமாறு சாத்திரரூபத்தில் வெளிப்படுத்தித்தந்த பெரியோர்களாகிய மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்னும் நால்வரையுமே சந்தான குரவரென வழங்கி வருகின்றோம். இவர்களுடைய குருத்துவம் திருக்கயிலாயச் சிவபிரானிடத்தினின்றுந் தோன்றி வழி வழியாக வருகின்றதென்று மதிக்கப்படுதலானும், இந்நால்வருட் பிந்திய மூவரும் முறையே தத்தமக்கு முந்தியோரைக் குரவராக் கொண்டமையானும், மற்றைச் சமய குரவர் முதலியோர் ஒவ்வொருவருஞ் சிவபிரானால் நேரே யநுக்கிரகிக்கப் பெற்றமையானும், சந்தானகுரவர் என்னும் குறியீடு இவர்களுக்கே சிறப்பாற் பொருந்தமுற்றதாயிற்று. இவர்களுக்கு முந்திய குரவர்கள் முறையே சிவபெருமான், நந்தியடிகள், சனற்குமாரர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதி முனிவர் என்னும் ஐவருமே என்பது சைவசமயிகளது கொள்கை.

சைவருட் பெரும்பாலார்க்குச் சந்தானகுரவர் இன்னின்னார் இவர்கள் செய்த நூல்கள் இன்னின்ன வென்பதுமட்டுமே தெரியவருமன்றி இவர்கள் திகழ்ந்தகால மிது இவர்கள் சீவியகாலத்தை பொட்டி நடந்த அற்புதங்கள் இவை யென்பது விளங்குவதன்று. ஆயினு மிவ்விஷயங்கள் கேள்விமுறையாற் பல பெரியோரகத்து முழங்குவனவேயாம். அவற்றைக் காலவரையறை யொன்றுமுழியத் தொகுத்துச்செய்த நூலொன்று சில மாசங்களுக்குமுன் யாம் கண்டோம். அதன் பெயர் சந்தாநாசாரியபுராண சங்கிரகம். அதனை யாக்கியோர் திருவாரூர் சுவாமிநாததேசிகர். இவர் தமது பாயிரத்திற் புராணவரலாறு கூறுங்காலத்து 'எம்பெருமக்கள் காதை' (சந்தானகு

ரவர் சரிதம்) பதினெண் புராணத்துட் பவிடியத்திற் கூறப்பட்டது என்கின்றனர். நூற்பெயருட் சங்கிரக மென்றமையால் பவிடியத்தில் சரிதம் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது போலும். அது பவிடியத்திலுளதாயினும் இலதாயினும் நாட்டில் வழங்குங் கேள்வி மொழிகளைப் பெரும்பான்மை யொத்திருக்கின்றமையின் அதனைப் பின்பற்றிக் குரவர்கள் சரித்திரத்தைச் சுருக்கிக்கூறுகின்றோம்.

## மெய்கண்டதேவர்.

சோழ நாட்டிலே, கம்பை நதிக்கு வடகரையிலுள்ள கடந்தை நகரத்திலே, காராளர் குலதிலகராய் அச்சுதர்களப்பாளர் என்னும் பெயரினராகிய பிரபு ஒருவர் இருந்தார். அவர் பலவிதமான செல்வங்களை யடைந்தும் அவற்குற்றிருப்தி பெறாத அருஞ்செல்வமாகிய புத்திரப்பேற்றை யபேக்ஷித்துத் தங்குருவாகிய சகலாகம பண்டிதரை யடைந்து அவர் பாத கமலங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி 'ஐயனே அளவுபடாத பேரறிவுடைய மதலை யொன்று யான் பெறும்படி தேவரீர் கடாக்ஷிக்க வேண்டு' மென்ன, அவரும் தேவாரத் திருமுறையைக்கொடுவந்து பூசித்துக் கயிறுசாத்திப் பார்த்தார். அப்பொழுது, திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவெ லாம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னும் பதிகங் காணப்பட்டமையால் ஆசிரியர் அகமிக மகிழ்ந்து, தம்மடியில் வணங்கி நின்ற கடந்தையூர் மாணுக்கரை நோக்கி 'பொன்னிநதிக்கு வடபாற்றிகழும் திருவெண்காட்டை யடைந்து, வேண்டிய வரங்களை யீந்தருளும் பெருமைத்தாய் அவ்விடத்து விளங்கும் முக்குளத்தில் மூழ்கி, பிரமவித்தியா நாயகியையும் சிவபெருமானையும் பக்தி சிரத்தையோடு வழிபட்டு, சிவனடியார்களுக்கு மகேசுவர பூசையும் செய்து அவ்வடியார்கள் பணியையே சிரக்கணியாகக் கொண்டு இன்னு மிவைபோன்ற அறச்செயல்களையும் உன்னுடைய மனைவியோடு செய்து அந்த ஸ்தலத்திலேயே சிலகாலம் வசிப்பாயாயாயின் உமையொருபாகரது திருவருளால் ஞானமே யோருருவெடுத்து வந்த தென்னுந் தன்மையனுகிய ஒரு புதல்வனைப்பெறுவாய். இது சத்தியம். ஐயுறவு சிறிதும் வேண்டியதின்று' என்றார். என்னலும் அச்சுதர்களப்பாளர் ஆசிரியரை மெய்யன்போடு வணங்கி 'இற்றைப்பொழுதே, தாழ்க்காது என் மனையாளோடுஞ் சென்று தேவரீர் விதித்த வண்ணஞ்செய்வேன்' என்று கூறி விடைபெற்றுக்கொண்டு தம திருப்பிடஞ்சேர்ந்தார். பின்னர் தமதாசாரியராகிய சகலாகமபண்டிதராற் சுட்டப்பட்ட சுவேத வனத்தை [சுவேதம்-வெண்மை, வனம்-காடு] யடை

ந்து பல தருமங்களும் வழுவாதியற்றிவந்தார். இவ்வாறு ஓராண்டு கழிதலும் ஒரு நாள் சிவபெருமான் அவரது கனவிற்றோன்றி "அன்பனே, இப்பிறப்பில் புத்திரப்பேறடையும் விதி உனக்கில்லை" யென்றனர். அது கேட்ட அச்சுதர்களப்பாளர் "சந்திரமௌலீ! திருஞானசம்பந்தப்பெருமான் சொன்னலம் பொருணலங்கள் மலிய உம்மை யேத்திய நற்றமிழ் மறையைச்சிந்தித்து அது மெய்ம்மை யென்றே நம்பினேன். இதுவே விதியாம். ஆதலால் இம்மையிலேயே சற்புத்திரனை எனக்கு அருளல் வேண்டும்" என்று பலமுறை யிரந்து துதித்தார். அப்போழ்து சிவபெருமானும் இரங்கி "பக்தனே, உன் துதிகளைக்கேட்டுப் பேருவகைபூத்தோம். ஞானபோனகமுண்ட பாலன் நம்மைத் துதித்தபாடலே யுறுதி யென்று நீ நம்பினையாகலான், உன்னிடத்து அந்தக்காழிச்சம்பந்தனைப் போலவே ஒரு புத்திரன் வந்தெய்துவான்" என அருளிச்செய்து மறைந்தனர். இதனைக்கேட்ட அச்சுதர் களப்பாளர் அலகிலா வானந்தமுற்று முன்போலவே அறங்களெல்லாம் வழுவாது செய்துகொண்டு வந்தார். அக்காலை அவரது மனையாள் கருப்பவதியாயினள். பத்தாந்திங்கள் வருதலும் உலகுய்யச் சிவஞானபோதமருளிய பிள்ளையார் தந்தந்தையாரும் மற்றையாருங் களிக்குமாறு உதயஞ்செய்தார். சாதகரும முதலிய சடங்குகள் யாவும் முறையே நடத்தப்பட்டன. அச்சுதர்களப்பாளரும் தம்மனைவி சுற்றங்களோடு கடந்தைமாநகரையடைந்து அங்குத்தம்மாளிகையிலிருந்தார். அவர் பிள்ளையோடு நகரிக்கு வந்தெய்திய செய்தியறிந்தோரெல்லாம் பிள்ளையை வந்து கண்டு குதூகலங்கொண்டு திரும்புவர். நாமகரணஞ் செய்தற்குக்காலம் வந்தபொழுது நமது பிள்ளையார்க்கு 'சுவேதவனப் பெருமாள்' என்னும் நாமஞ்சூட்டினர்கள். கடந்தையிலே யுள்ளாரனைவரும் சந்தோஷிக்குமாறு பிள்ளையார் அத்தலத்திலிருந்த காலத்து அவரது மாமனார் திருவெண்ணெய்நல்லூரினின்றும் வந்து அவரைத் தமதூருக்குக் கொண்டுபோய் வைத்துப்பாராட்டி வளர்த்துவந்தார். சரியை கிரியை யோகம் என்னும் மூன்று சாதனங்களும் முற்பிறப்பிலேயேமுடித்துச் சாமுசித்தராய்த்திகழ்ந்த பிள்ளையார் திருவெண்ணெய் நல்லூரிற்றங்கிய விக்காலத்து அவர்க்குவயது மூன்று. இது நிற்க. திருக்கயிலாய மலையினின்றும்புறப்பட்டுப் பொதியைக்கு விமானமீது சென்றுகொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் அப்பதிவந்தவுடனே தம் விமானம் தானே நிற்றலைக்கண்டார். காரண மின்னதென ஞானதிருஷ்டியாலுணர்ந்த முனிவர் விமானத்தினின்று மிழிந்து சுவேத வனப்பெருமாளுக்கு மெய்யுணர்வு வந்திருத்தலைத் திருவருளாற்றேர்ந்து அவருக்கு தீக்ஷை செய்து, மெய்கண்டான் என்னும் தீக்ஷா நாமமுந்தந்து, சிவஞானபோதநூலைப் பொழிப்போடு தங்குரவரிடத்திற் கேட்டபடியே யிவருக்கு மருளி "இதனைச் செந்தமிழாலாக்குக" என்றுஞ்ஞாபித்துப் பொதியைபோயடைந்தார். பின்னர், மெய்கண்டார் பொல்லாப்பிள்ளையார் சந்நிதிக்கேகித் தாங்கேட்ட உப

தேசப்பொருளைச் சிந்தித்துத்தெளிந்து நிட்டை கூடிவந்தார். தமதாசாரியர் ஆஞ்ஞையை யுன்னிச் சிவஞான போதத்தைத் தமிழாலருளிச்செய்து அதற்கு வார்த்திகப்பொழிப்புரை யென்றொரு பொழிப்புஞ் செய்துவைத்தார். அக்காலத்துப்பரிபக்குவர்கள் அநேகர் தம்மைச்சரணடைதலும் அவர்களுக்கெல்லாம் கிருபை புரிந்து சிவஞானபோதத்தை பொருட்பொலிவுறக் கற்பித்தருளினார். சின்னாட்செல்லுதலும், இவரது குலகுருவாகிய திருத்துறையூர்-சகலாகம பண்டிதர், தம்மை மாணாக்கர் தரிசிக்காமைக்காகக் கவன்று தாமாயினும் திருவெண்ணெய் நல்லூருக்குப்போகலாமெனத்துணிந்து முன்னே ஆள்விடுத்தார். மெய்கண்டாரும் அவர் வரவு கேட்டு மிகமகிழ்ந்தார். அவ்வூர் வேளாளரெல்லாம் தத்தம் வீடுகளையும் வீதிகளையும் அலங்கரித்து மாடங்களைப்புதுக்கி வாழை கமுகு தோரணங்கள் நாட்டி, தங்கள் குருவை யெதிர்கொண்டு வணங்கினார்கள். ஆகம குரவரும் வழிபாடுகளை மகிழ்ந்தேற்று ஊரை யடைந்து வீதிவலம் வந்து சிவபெருமானைக் கோயிலிற் சென்றிறைஞ்சித் திருமடத்துப்புகுந்தார். திருமடத்தில் அவர்க்கு நடக்க வேண்டிய உபசாரங்கள் அனைத்தும் சரிவர நடத்தப்பட்டன. மெய்கண்டாரோ இவர் வரவைச்சிறிதும் எதிர் நோக்காது தமதிருப்பிடத்தில் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லிக்கொண்டிருந்தார். ஆகம பண்டிதர் மெய்கண்டார் கருத்தையறிய விரும்பி யவரிருக்கு மிடஞ்சென்று சமீபத்தில் உலவினார். ஆண்டுள்ள மாணவர்கள் ஆணவம் என்னும் மொழிக்கு நான்முகமாகப்பொருள் விசாரித்தலைக்கண்டு, மெய்கண்டாரை நோக்கி ஆகமகுரவர் சினஞ்செறிந்த மனத்தோடு “ஆணவத்தின் சொரூப மறிவீரோ” வென்று கேட்டவளவில், அவரும் தமது தர்ச்சனி விரலினால் குரவரையே சுட்டிக்காட்டினர். உடனே ஆகமகுரவர் சிவஞானங்கைவரப்பெற்று மெய்கண்டார் கழலிற்பணிதலும், அவர் குரவரை ‘அருணந்தியே’ யெனவிளித்து விபூதிப்பிரசாதங் கொடுத்துத் தமது குரு தமக்கநுக்கிரகித்த வண்ணமே தாமும் இவருக்கு அநுக்கிரகித்து சிவஞானபோதத் தமிழ்ச் சூத்திரங்களையுரைத்து வார்த்திகப்பொழிப்புரையும் தெளிவாக உபதேசித்து அளவுகடந்த அன்போடு இவரைத் தமது முதன்மாணாக்கராக்கொண்டார். பின்னர் ஸ்ரீ பஞ்சாக்ஷரமும் மகாவாக்கியமும் முறையே உபதேசித்தருளினார். இவ்விதமாக அருணந்தியார், மனவாசகங் கடந்தார், சிற்றம்பல நாடிகள் முதலாக நாற்பத்தொன்பதின்மர் பரிபாகமுற்ற பக்குவர்களுக்கு சிவதீக்ஷைசெய்து மெய்ப்பொருளை யுணர்த்தி அவர்களையெல்லாம் உய்யக்கொண்டார். மாணாக்கர்களுக்கு உபதேசித்தலும் நிட்டை கூடலுமே தொழிலாக்கொண்ட இவர்க்கு அத்துவித சோகம்பாவனையே நித்திய தொழிலானமையால் நின்மல சீவன் முத்தராகி ஆனந்தரூபியாய் முடிவில் சிவத்துவமெய்தினார்.

## அருணந்தி சிவாசாரியர்.

திவ்ய க்ஷேத்திரமாகிய திருத்துறையூரிலே, ஆதிசைவகுலத்தார் புரிந்த தவமே யோருருவெடுத்து வந்ததென்ன ஒரு சற்புத்திரர் அவதாரஞ் செய்தார். சாத கருமம், நாமகரணம், அன்னப்பிராசனம் முதலிய கிரியைகளனைத்தும் தக்க பருவங்களில் சாத்திரவிதிப்படி நடத்தப்பட்டன. பின்னர், உபநயனம் நடத்தவேண்டிய பருவம் வருதலும் அக்கிரியையை வேதாகமங்கள் கூறு நெறியிலே முடித்து காயத்திரி யுபதேசமுஞ் செய்தனர். அந்நாண் முதல் பிள்ளையார் கருமகாண்டம் பத்திகாண்டம் ஞானகாண்டமென முத்திறப்படும் வேதத்தினைப் பலகாலுமோதிப் பின்னர் ஆறங்களிலும் பயின்று இறுதியில் காமிகமுதல் வாதுளமீறுகவுள்ள சைவாகமங்களை உபாகமஞ் சார்பாகமங்களோடு கற்று இக்கல்வி யெல்லாம் அமையா வென்று தமிழிலும் மிக வல்லவராயினர். ஒப்புயர்வற்ற கல்வியை வருந்திக் கற்று வல்லராயினமை கண்ட புலவர்கள் இவரைச் சகலாகம பண்டிதரென அழைக்கத்தொடங்கினர். சமயம் விசேஷம் நிர்வாணம்என்னுந் தீக்ஷை வகைகளும் ஆசார்யாபிஷேகமும்பெற்று உத்தம சைவாசாரியராய் விளங்கிய இவர் தம்மிடத்து வந்தோர்க்கெல்லாம் ஆகம வழியில் தீக்ஷைசெய்து சைவசமயமே சமயம் என்னும் உண்மையை நன்குபுலப்படும்படி சொல்லிவந்தார். இவ்வாறு சிறப்புற்று வாழுநாளிலே திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர்முன் தமது ஞானம் தடையுற்றமைகண்டு அவரது பாதத்தில் விழுந்து தம்மை யுய்யக்கொள்ளுமாறு வேண்டினர். மெய்கண்டதேவரும் இவரது விருப்பினை நிறைவேற்றி அருணந்தியென்னும் சிறப்புப்பெயர் சூட்டினர். பின்னர் அருணந்தியார் மறைஞான சம்பந்தர்க்கு உபதேசித்து, சிவஞானசித்தியார் இருபாவிருபது என்னுஞ் சாத்திரங்களை அருளிச்செய்து பரசிவோகம் பாவனையிலமர்ந்தவாறே சிவத்துவ மெய்தினர்.

## மறைஞான சம்பந்த சிவாசாரியர்.

புண்ணிய நதியாகிய வெள்ளாற்றின் கரையருகில், திருத்தூங்கானை மாடம் என்னும் மறுபெயர் கொண்ட திருப்பெண்ணாகடம் (கடந்தை) என்னும் திவ்ய க்ஷேத்திரத்திலே, பிராமணர்கள் செய்ததவம் உருவெடுத்து வந்ததென்னும்படி ஒருவர் அவதாரஞ்செய்தார். சகல கிரியைகளும் கிரமமாக நடத்தி, ஏழாம் ஆண்டிலே அவருக்கு உபநயனஞ் செய்தார்கள். அவர் தோன்றிய மரபு மறையோர் மரபாதலின், வேதங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், ஆறுசாத்திரங்கள் இவையெல்லாம் முறையே கற்றுப் புலமை நிரம்பி மறைஞான சம்பந்தர் என்னுஞ் சிறப்பு நாமமும் பெற்றார். பின்னர், இவர் அருணந்தியாரை யடைந்து 'என்னைப் பாசமகற்றி யாட்கொண்டருளும்' என்று விண்ணப்பிக்க அவரும் ஆகம நெறிமுறையே சிவதீக்ஷைகள் செய்து சிவஞானோபதேசஞ்செய்தார். அவரிடத்து

விடைபெற்று, மறைஞானசம்பந்தர் சிதம்பரத்தை யடைந்து சிற்சபா நாதரை வலங்கொடுபணிதலும் வேதாகமங்களொருங்கே சிறப்பித்தோதும் ஐந்தெழுத்தை யிடைவிடாது செபித்தலுமே தம்பணியாகக் கொண்டு வீற்றிருந்தார். அந்நாளிலே உத்தமபரிபாகராகிய உமாபதியார்க்குத் தத்துவ ஞானோபதேசஞ் செய்து திருக்களாஞ்சேரியிற் சிலகால மமர்ந்து பின் பரமுத்தி யெய்தினார்.

## உமாபதி சிவாசாரியர்.

சோழநாட்டிலே, உத்தமோத்தமதலமாகிய சிதம்பரத்திலே, அந்தணர் மரபிலே உமாபதி யென்பவர் தோன்றிச் சகலகலைகளிலும் வல்லவராகிப் பொன்னம்பலவ ரிருதாளே புகலெனப்பற்றி விதித்தகாலங்களில் அவரைப் பூசித்து வந்தார். தில்லைச் சிவபிரானைப் பூசிப்பார் மூவாயிரவராகலின் மூவாயிரநாட்களி லொருமுறையே ஒவ்வொருவரும் பூசிக்கும் பேறுபெறுவர். நம்முமாபதியாரும் தமக்கு ஏற்பட்டதினத்தில் பூசைமுடித்து விருதுகளோடு தந்தச் சிவிகையிலேறிச் சிவனடியார்கள் இருபுடையுஞ் சூழ்ந்துவர வீதிவழித் தம்மில்லத்திற்குத் திரும்பினார். அப்போழ்து மறைஞான சம்பந்தர் சிவிகையை நன்குநோக்கி ‘அடியார்கள் சூழ்ந்துவர பகற்குருடன் பட்டகட்டையிற் போவதைப் பார்த்திர்களா’ என்றார். இம்மொழிகள் தமது செவியிற்புகுதலும், உமாபதியார் அடங்காவன்பும் மகிழ்ச்சியுங் கொண்டு உடனே சிவிகையை விட்டிறங்கிப் பரிசுத்த மூர்த்தியாகிய சம்பந்தர் திருவடிகளை வணங்கி ‘பார்த்தவுடனே பகற்குருடென்றருள் செய்தீர். அடியேனுக்கு அதன் உண்மையையுரைத்துப் பூர்ணஞானத்தை உபதேசித்தருளல் வேண்டும்’ என்றிரந்து நின்றார். அன்புமிக்க குரவரும் தமது வாக்கியப் பொருளுரைத்தார். பின்னர் உமாபதியார், சாமானியரே மேற்கொண்டொழுகற் பாலதாகிய வருணபிமானத்தை யறக்களைந்து மிகுந்த பக்தியோடு தம்மாசிரியர் குறிவழி நின்றார். அக்காலத்திலே மறைஞான சம்பந்தர் தம்மிடத்தே பணிசெய்தொழுகும் உமாபதியார்க்கு இருவினை யொப்பு மலபரிபாகம் வந்த தன்மை யுய்த்துணரக் கருதி, ‘செய்தொழிலிற் பாவமில்லது நெய்தற்றொழில்’ என்னும் உறுதி கடைப்பிடித்து அத்தொழிலாலே ஜீவிக்குஞ் சாதியார் நெருங்கிய வீதியிற் சென்று, நூற்பாவிற் செலுத்திய கூழின் சேடம் கொண்டு வார்க்குமிடத்து தங்கரத்தை நீட்டி அதனை வாங்கியுண்டார். உண்ணுங்காலை யவர்கரத்தின் கீழொழுகுங் கூழை அருகர் நின்ற உமாபதியார் ஏந்தியுண்டார். மறைஞான சம்பந்தர் உமாபதியாரை யழைத்துப்போய் அவருக்கு ஞானோபதேசஞ் செய்து சிவஞானபோதம் முதலிய நூல்களையும் அவற்றினது நுட்பங்களையும் திருவாய் மலர்ந்தருளினார். உமாபதியாரோ சிவானந்தவாரியில் மூழ்கித் தம்மை யொப்பாரும் தம்மின் மிக்காரும் இன்றி விளங்கினார். இத்தகைய பெருவாழ்வு பெற்ற நம்முமாபதியாரை வேதியர்கள் அறியாராகி இவர் தமக்கு விதித்த ஆசாரங்களி

னின்றும் வழீஇயினார் என்று கருதி எல்லாருங் காணும்படி இவர் பிரமாணத் தன்மையை யிழந்தாரென் றிகழத்தலைப்பட்டார்கள். அக்காலை, மநுகுல வேந்தனாற்பெற்ற கொற்றவன்குடிக்கேகி அவ்விடத்து ஒருமடமமைத்து, சிவனடியார்கள்சூழச் சிவபூசையாற்றித் தியானாதிகள் செய்து கொண்டிருந்தார். இவ்வாறு ஞான நிட்டைகூடி வாழ்ந்திருக்கு நாளிலே, சிதம்பர நடேசர்க்குப் பூசைசெய்யும் முறைநாள் வந்தது. அஃதுணர்ந்த உமாபதியார்சிதம்பரத்துக்குச் சென்று கோயிலுட் புகுந்தார். மனம்வேறுபட்ட மறையோர் ‘புகுதல் கூடாது.. வந்தவழியை நோக்கிச்செல்க’ என்று கூறித் தடை செய்தனர். இக்கொடிய மொழிகேட்ட உமாபதியார் தம்மடத்தை யடைந்து மானதபூசை செய்தார். இவரை வெறுத்துத்தள்ளிய பிராமணர் பூசைசெய்யும்பொருட்டுத் திருக்கதவ நீக்கிஅம்பலவாணர் சந்நிதிமுன்னர்க் குறுகினர். ஆண்டுப்பேடகத்தைக் காணாது அஞ்சித்தடுமாறி யீதென்ன மாயமென்ன மாழாந்து சிவபிரானைநோக்கிக் குறையிரந்தார். அப்போழ்து, ‘தன்முறைப் பூசையைச் செய்கின்ற நம்மன்பன் உமாபதிப்பேர் அந்தணன்மாட் டமர்ந்தோம்’ என்றோ ராகாசவாணி யார்த்தெழுந்தது. அதனை வேதிய ரனைவருங்கேட்டு உமாபதியாரை யடைந்து, யாங்கள் செய்த குற்றத்தைப்பொறுத்து நடராச பூசை செய்யத் தேவரீர் இன்னே எழுந்தருளல் வேண்டுமென்று விரும்பினர். உமாபதியாரும் அந்தணர் பின்னே சென்று பூசை முடித்து மீட்டும் மடம் வந்து சேர்ந்தார். இது நிற்க.

முற்காலத்திலே ஒரு முனிவன் பன்னாளுனாற்றிய சிவபுண்ணிய முதிர்ச்சியால் அகக் கரணங்கள் வசப்பட ஞானசாஸ்திர படனஞ் செய்து பேரறிவாளனாகி வாழ்ந்திருக்கும் நாளிலே ஒருபாவத்தைச் செய்து வைத்தான். அக்காரணத்தாற் பூலோகத்திற் புலையர் குலத்தி லவதரித்தான். அவன் பெயர் பெற்றான். பாலப்பருவம் நீங்கிக் காளைப்பருவ மடைந்தவுடனே தன்பிதா வேண்டுகோளின்படி தன் குலத்துள்ளேயே ஒரு பெண்ணை மணந்தான். இவ்வாறு சின்னாட் செல்லுதலும் பூர்வஞானம் மனத்தில் வந்துதிப்பத் தன் மரபிலுள்ள கீழ்மைகளையெல்லாஞ் சகிக்கலாற்றானாகிச் சேரியை விட்டுப்பிரிந்துபோயினான். உண்மைஞானத்தி லழுந்திய பெற்றான் தன் சுற்றம் மனையென்பனவற்றை நீக்கிச் சிதம்பரத்தை யடைந்து கோயின் மதிற்புறத்தினின்றுஞ் சிவபிரானைத் தொழுதிருந்து சிறுபொழுது போக்கிப்பின்னர் நாடோறும் கோயின் மடைப்பள்ளிக்கு விறகு வெட்டிக் கொடுவந்து கொடுக்கும் பணிவிடையை மேற்கொண் டொழுகினான். அந்நாளிலே சிவபிரானது திருவருளும் பெற்றானுக்கு முத்திபடையுங் காலமும் ஒத்துவர, பெருமான் கனவிற்றோன்றி,

“அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு—படியின்மிசைப்

பெற்ருன்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை."

என்னும் திருமுகத்தை யீந்து, 'எம்மிடத்துப் பேரன்பு பூண்ட உமாபதி யென்னும் பெரியோன் கொற்றவன் குடியில் வாழா நின்ருன். அவன்பாற் சென்று பணியியற்றி யித்திருமுகத்தைக்கொடு. அவன் உனக்கு மும்மல நீக்கம் வருவித்து முத்திதந் தருளுவன்' என்றருளித் திருவுருக்கரந்தார். கனவு நீங்கிய வளவில், சாம்பானர் திருமுகம் தமக்கு வந்த வரலாற் றருமையைச் சிந்தித்து மிக மகிழ்ந்து கொண்டாடினர். பின்னர்ச் சிவன் ஆஞ்ஞாபித்தபடி கொற்றவன் குடியை யடைந்து பன்னளாக விறகுப் பணி செய்துவந்தார். ஒருநாள் பணி மழையால் முட்டுப்பட்டது. அந்நாள் மடத்தில் அமுதமைக்கத் தாழ்த்தது. அஃதறிந்த உமாபதியார் தாமத மென்னை யென்று கேட்டவளவில் மடைத்தொழிலோர் வணங்கி "சுவாமி! பன்னளா கப்பஞ்சமனொருவன் விறகளித்து வந்தான். இற்றைஞான்றவன் வந்திலன்" என்ருர். உமாபதியார் அனையன் நாளை வருவானயின் அவனை யெம்மிடத்துத் தம்மின்' எனக்கட்டளையிட்டு மடைத் தொழிலோரைப் போகவிடுத்தார். மறுநாட் காலையில் சாம்பானர் இரட்டிப்பங்கு விறகு கொண்டு மடத்தருகு வந்தார். வந்தமை உமாபதியார்க்குத் தெரிவிக்கப் பட்டது. குரவருந் தமதிருக்கை விட்டெழுந்துமுன்றிலை நண்ணிச் சாம்பானரை நோக்கி,' அப்பா நீயார்?எங்ஙனமிங்கு வந்தாய்?'எல்லாம் விடாமற்சொல்' என்று கேட்டார். சாம்பானரோ ஒன்றுங்கூருது சிவனர் தந்த திருமுகத்தை உமாபதியார் முன்னர் வைத்து விழுந்து வணங்கினர். அடியார்கள் ஓடித் திருமுகத்தைக் கொண்டுவந்து தருதலும் வாங்கி நோக்கி ஆளுடைய அத்திருமுகமென்றுணர்ந்து அதனைச் சிரமிசை யேற்றிக்கண்களிலொற்றி கரசரணதி யவயவங்களெல்லாங் கம்பிக்க ஆனந்தக்கூத்தாடினர்.பின்னர், சிவனர் ஆணையை நினைந்து சாம்பார் சுத்த சத்திநிபாத முற்றமை நோக்கிச் சத்திய நிர்வாண தீக்ஷையால் அக்கணத்தே அவர்க்கு முத்தியளித்தார். இதனைக் கேள்வியுற்றசாம்பார் மனைவி முதலியோர் எவனே ஒரு பிராமணன் எங்கள் பெற்ருனைத்தீக்கொளுவச்செய்தான்என்றரசனிடஞ்சென்று முறையிட்டார். அரசனுமிவர்பால் வந்து வணங்கி ' பிராமணேத்தமரே, இன்று சிலர் என் சிந்தனை கலங்குமாறு செய்தனர்' என்று குறிப்பால் தான் வந்த காரணமுணர்த்தினன். உமாபதியார் தீக்ஷையின் மகிமையை விஸ்தாரமாக எடுத்துப்பிரசங்கித்தார். ' அடியேன் ஐயந்தெளியுமாறு இன்று மொருதீக்ஷை செய்து காட்டல் வேண்டு' மென்று அரசன் விரும்ப, உமாபதியார் சூழ்ந்து நின்ற அடியார் குழாங்களை நோக்கி சத்திநிபாதம் பெற்ருரொருவருமின்மை கண்டு சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்யு நீரினுற்றழைத் தோங்கி நின்ற முள்ளிச்செடியைத் தெரிந்து கொண்டு ' அரசனே, அடியார்களை யெல்லாம் ஒருவர்பின் னொருவராக நோக்கியும் பக்குவரகப்பட்டிலர். பரசிவ வழிபாட்

டிற் சிறந்த புண்ணியர்க்கு உண்ணுமாறு காய்கள் தந்த முள்ளிச்செடியீதோவுள்ளது அதனை முத்தியடைவிப்பேன் காண்' எனப்புகன்று அச்செடியினை அருளால் நோக்கினார். அது சிறந்த ஜோதியாகி அரசனையுள்ளிட்டாரனைவருங்கண்டு சேவிப்ப விசும்பிற்சென்று சிவனுருவெய்திற்று. நிகழ்ந்த வண்ணங்கண்ட அரசன் பட்டாடை முத்துமாலை முதலிய கொடுவந்து உமாபதியாரைப்பூசித்து 'அடிகளது பெருமையறியாது பிழையிழைத்தேன் கமித்தருள்க' என்று வேண்டித்தன்னரண்மனைக்கு மீண்டான்.

பின்னர், அருணமச்சிவாயர் முதலிய பக்குவர்கட்கு ஞானோபதேசஞ் சாத்திரோபதேசஞ் செய்து சித்தராய் அமர்ந்திருக்கு நாளிலே நடராஜ தரிசனார்த்தம் சிதம்பராலயத்துட் பிரவேசித்தார். ஆங்கிருந்த வேதியர் இவரைக் கண்டருவருத்து மதிற்புறத்தே கொண்டுவந்து தள்ளிவிட்டுத் தாங் கோயிலுட் புகுந்து சிவனார்க்குத் திருவிழா நடத்தத் தொடங்கினர். விழாக்கொடி யெழாமை கண்டவேதியர் மிக வருந்திப்பெருமானை நோக்கிப் பிரார்த்திப்ப, "கேளீர் பிராமணர்களே, நமது பக்தன் உமாபதி வருவானாயின் கொடியேறும்" என்றோரசரீரிவாக்கு விசும்பிலெழுந்தது. அக்கணமே யாவரும் உமாபதியார் மடத்தையடைந்து, சிறியேமாகிய யாங்கள் செய்த பிழை பொறுத்துக் கோயிற்கு எழுந்தருளித் திருவிழா வழைத்தல் வேண்டுமென்று விண்ணப்பித்தனர். உமாபதியாரும் அவ்வடியார் சூழப் பொன்னம்பலவர் திருமுன் எய்தி

"ஒளிக்கு மிருளுக்கு மொன்றேயிட மொன்று மேவிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்ப டிக்கொடி கட்டினனே."

என்னும் பாசுரத்தை பாடி விழாச்செய்து முடித்தனர். பின்னர் அதனையே முதலாகவுடைய கொடிப்பாட்டோடு சிவப்பிரகாசம், வினாவெண்பா, திருவருட்பயன், உண்மை நெறிவிளக்கம், போற்றிப் பஃறொடை, சங்கற்ப நிராகரணம், என்னும் சித்தாந்த சாஸ்திரங்களையும், பதிகக்கோவை, திருப்பதிக் கோவை, சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம் என்னும் சைவமரபு விளக்க நூல்களையும் அருளிச்செய்தார்.

இன்னுஞ் சின்னாட்கழிய உமாபதியார் கோயிற்புராணம் என்னும் பெயரிய சிதம்பர க்ஷேத்திரமான்மியத்தை யாத்து அதனை அரங்கேற்றுமாறு கோயிற்குக் கொணர்ந்த பொழுது ஆண்டுள்ளார் இவரை யம்பலத்துப்புகுத வொட்டாது தடைசெய்தனர். நடராஜப்பெருமான் திருவுளமிரங்கி உமாபதியார் பெருமையை யுலகிற்குப் புலப்படுத்த வெண்ணி ஒருநாட் சாயங்காலம் அந்தணர் தன்னுருவத்தைக்காணாதவாறு மறைத்தருளுதலும் அவர்கள் சோகமுற்றுக் கரையத்தொடங்கினர். அப்பொழுது நாம் உமாபதி பேடகத்

தீட்டங்கினோ மென்றோ ராகாசவாணி கூறிற்று. இதனைச் செவியுறக்கேட்டமறையவர் தாய்ப்பசுவைப் பிரிந்த கன்றென உமாபதியார் பக்கல் வந்தெய்தி 'அந்தணர் குல சிகாமணியே, முழுமக்களாகிய யாங்கள் இழைத்த தவற்றினைப்பேணலாகாது' என்று வேண்டி அவர் பாதகமலங்களில் வீழ்ந்து பணிந்தனர். பணிந்து, "சுவாமீ, அடியேங்கள் நடராஜப் பெருமானுக்குப் பூசை செய்யுமாறு கோயிலுட் சென்றேம். அங்குப் பெருமானைக்காணாதுஅழுங்கினோம். அக்காலை 'உமாபதி பேடகத்து ஞறைகின்றோம்' என்று வானிலெழுந்த தொருசொல்" என்று விண்ணப்பித்த வளவில், உமாபதியார் 'எம்மாற் குறைபொன்று மில்லை. எழுதிய கோயிற் புராணத்தைப் பேடகத்துள் சும்மாவைத்துப் பூசித்தோம்.' என்றார். அது கேட்ட பூசுரர் 'அடிகளே, இப்புராணத்தை அம்பலத்தில் வைத்து அரங்கேற்றி யருளுமின்' என வேண்டித் தில்லைநகரை யலங்கரித்து, கொடி தோரணங் குடை சாமரை சின்ன முதலிய சூழச் சிவிகையொன்று மடத்திற்குக் கொடுவந்து 'தேவரீர் இதனுள் எழுந்தருளல் வேண்டு' மெனப் பிரார்த்தித்தனர். அவ்வாறே உமாபதியாரும் அந்தணர் தாங்குஞ் சிவிகையேறிக் கோயிலையடைந்து புராணத்தைப் பூசித்து வாசிக்கத்தொடங்கின அளவில் பெருமானும் மன்றிலெழுந்தருளினர். யாவருமிகமகிழ்ந்து புராணத்தைப் பக்திசிரத்தையோடு கேட்டனர், புராணமும் அரங்கேற்றப்பட்டது. பின்னர்ச் சிலகாலம் உண்மையடியார்கள் போற்ற உலகில் வாழ்ந்திருந்து உமாபதியார் நித்திய பரம்பொருளாகிய சிவத்தோடு அத்துவிதமாயினர்.

(இன்னும் வரும்.)

அனவரதவிநாயகம் பிள்ளை.

---

## அன்னி பெஸன்ட் அம்மை சரித்திரம்.

### ஞானபோதினியைப் படிக்கும் நண்பர்காள்!

சென்ற தேசாபிமானிச் சஞ்சிகைகளு ளொன்றனிடத்துக் கும்பகோணக் கலாசாலை மாணுக்கனுப தி. வே. அரங்கசாமி யென்னும் பெயர் கொண்டெழுந்த வொருவர் ஆன்றோராட்சியுஞ் சொற்பொரு ளுணர்ச்சியும் பத்திரிகை யொழுங்கும் விடயதான மரபுமாகிய இன்னோரன்னவற்று ளொன்றேனுஞ் செவ்வனே யுணர்தற்பேறு வாய்க்கப் பெறாது காதுகேளாக் கண்ணிலா னொருவன் 'ஐயகோ! யாவரோ ஒருவர் என்னைப் புடைத்துத் தெழிக்கின்றனரே! என்செய வல்லேன்! என்செய வல்லேன்!!' என்று வாய்விட்டழுது கூவி முறையிடுதலொப்ப, அன்னிபெஸன்ட் அம்மை சரித்திர விடயமாகப் பலவற்றை யியைபின்றிப் பிதற்றிப் புலம்புகின்றனர்,

அவர் தம் பிதற்றுரைக்கும் புலம்புரைக்கும் இயைபிலுரைக்கும் உதாரணமாகச் சில காட்டிய பின்னர், அவரது வாதத்திற்கு மொருமருந்து குறிப்பாம்.

" அன்னி பெஸன்ட் அம்மை யவர்களை யுலகெல்லாம் அறியுமே" என்று முதற்கணெழுதிய விவர், தாமே யெழுதிய இவ்வாக்கியத்தின் பொருளாற்றலை யுணரகில்லாது, பின்னர் இரண்டாம் வாக்கியமாக, " இந்த மாதரசியார் தமது ஜீவசரித்திரத்தைத் தாமே இங்கிலீஷ் பாஷையில் எழுதி வெளியிட்டிருக்கின்றனர்" என்று எழுதியது வேண்டாகூற லாதலை நோக்கி 'ஐயா நும்மொடு யான் தெரியாது வாதப்போர்க்கு வந்துவிட்டேன்' என்று கூறித் தங்கவுளிற் புடைத்துக் கொண்டொழிவாராக. இவ்வாறு முன்பினியைபுகள் கண்டெழுதமாட்டாதார்க்கு மூச்சேன் பேச்சேன் ? இனி யின்னணம் வாக்கியந்தோறும் வழூஉக்காணப் புகுதல் மணற் சோற்றினிற் கல்லாராய்தல் மானுமாதலின், தாலீபுலாக நியாயம்பற்றி அவர் தங்கூற்றுக்களினியல்பினை அறிவுடையோர் உய்த்துணர்வாராக.

இவ்விருவாக்கியங்கட்குமேல், அன்னி பெஸன்ட் அம்மை சரித்திரத்தைப் பாடினாரின்ன ரென்பதைப்பற்றி யோரையப்பாடும் நிகழ்ந்திற்றிலதாகவும் அந்நூல் செய்தவர் அவரே யென்றும் அஃதீரிரவிலேயே யெழுதப்பட்டதென்றும் இவர் கூறிக் கொம்பு குறித்தலை யுற்றுநோக்குமிடத்து நூல் செய்தாரும் அவரல்லர், அஃதீரிரவினு மெழுதப்படவில்லை யென்பது கொள்ளக் கிடக்கின்றது. அந்நூல் 76 விருத்தமான பாக்கள் கொண்டதென்பதும் அன்னி பெஸண்டு அம்மையார் மீதுள்ள அன்பினாலாதல் மதுரைப் பிரமஞான சபையார் வேண்டுகோளினாலாதல் அந்நூல் செய்யப்பட்டிலதென்பதும், " அவர்கள் முன்பாகப் படித்துப் பொருள் செய்யபப்பட்டது" என்பதனால் நூல் செய்தகாரணம் பொருள் வருவாய் செய்து கோடலே யென்பதும் நந்த மரங்கசாமியார் கூற்றால் வலியுறுகின்றன. நாயகன் கவியையும் பொருள் செய்யாத நகரினரோ இப்போலி நூலைப் பொருள் செய்திருப்பார்? அற்றேற் 'பாலபாரதி' யென்னும் பட்டமோ வெனில், " ஈதலரிதெனினு மின்சொலினு நல்கூர்த, லோகோ கொடிது கொடிதம்மா" என்ற நீதிக்கிணங்கி மதுரைமா நகரத்தார் அதனை அளித்திருத்தல் வேண்டும் ; அன்றியும் அப்பட்டமளித்தார் மதுரைமா நகரினரேயோ வென்பதும் ஐயுறற்பாற்று, புறநாடுகளினின்றும் வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் போந்து மதுரைமா நகரின் கண்ணே வாசஞ்செய்வார் தாமும் பாண்டி நாட்டினரெனவும் மதுரை யம்பதியின ரெனவும் வாய்ப்பறை யறைந்து கொள்கின்றனராதலின்.

ஜனவரி மாதத்து ஞானபோதினிப் பத்திரிகையில் இப்போலிநூல் ஆராய்ச்சி செய்யப்பட்டுளது. அவ்வாராய்ச்சி மிகச் சுருக்கமாகவும் செவ்விதாகவுஞ் செந்தமிழ் நடையி லெழுதப்பட்டுளது. தமது மேற்பார்வைக் கனுப்பப்பட்டா லன்றித் தற்காலத்து நூல்களு ளொன்றனையும் பொருள்

செய்யாத அப்பத்திராதிபரோ இப்போலி நூலை பொருபொருட் படுத்தி யாராய்ச்சி செய்வார்? அவர் அங்ஙனஞ் செய்ததும் மதுரைப் பிரமஞான சபையார், பத்திராதிபர் தாம் மேற்பார்வையிட்டு அந்நூலினைப் பற்றிய தங்கருத்தின்னதெனத் தமது ஞானபோதினிப் பத்திரிகையிற் குறிக்கற் பொருட்டு அனுப்பினமையி னென்க. அல்லாக்கால் அவர் இந்நூலினைப் பற்றிப் பேசுதற் கென்னை? அப்பத்திராதிபர் இது பண்டிதர் பாராட்டத் தகுவதொரு நூலன்றுமாறு தெளிவுபெறக் காட்டியிருத்தலே யன்றிப் போலி நூலென்றுந் தெரித்துளர்; அதுபற்றியே நம் அரங்கசாமியார் அழுகையெல்லாம். அடியுண்டார்அழுதல் இயல்பாமன்றே. ஞானபோதினிப்பத்திராதிபர் எழுதி ஐந்து திங்கட்குமேற் செல்லுமட்டும் வாளாதிருந்து இப்பொழுது எழுந்து புலம்புவதைக் கவனிக்குமிடத்து, பத்திராதிபர் கூற்றுக்கு உத்தரஞ் சொல்லத் தோன்றாமையால் வேறு யாரேனுஞ் சொல்ல மாட்டார்களா வென்றெண்ணி யிதுகாறுந் திக்குத்தோறுந் திகைத்தமையும், 'ஆறினகஞ்சி பழங்கஞ்சி' யென்றாற்போல நாட்கழித்து எழுதியக்கால்ஒருவரும் அத்துணை கவனிக்கமாட்டாராகவே ஞானபோதினிப் பத்திராதிபர் எங்கே கவனித்து நம்மை மறுக்க வரப்போகின்றன ரென்றெண்ணினமையுமே யதற்குற்ற காரணங்களாமாறு காண்க. அந்தோ! இவரெதிர் பார்த்ததற்குமாறாக யாம் இதனைக்கண்ணுறும்படி நேரிட்டது அவரது துரதிர்ஷ்டமேயன்றோ? ஞானபோதினிப் பத்திராதிபர் தமது ஆராய்ச்சி யென்னு மகாபாணப் பிரயோகத்திற்கு இந்நூன்முயலை யோரிலக்குவைத்தெய்தது நமது பண்டிதர் ஸ்ரீகிருஷ்ணமாசாரியரவர்கட்கு ஒரு கௌரவமேயாயினும், அவர்மேலொரு பிழையே யாமென்பது எமது கொள்கை.

இனி விடயத்தை யுண்மை தோன்ற வாதிக்குமிடத்துப் பதசாலங்கள் செய்து தப்பியோடுதல் ஒரு தோல்வித்தான மென்பதைத் தேசாபிமானி பாலிறங்கி யரத்துமரங்கசாமி யாரறிவாராக.

"'திவ்விய சொல்'லும் 'சுசித்திரய'மும் தம் நாவிற்கு ஆகா வென்று நீக்கு மியல்பினர்" என்றார். திவ்வியவசனமும், பலத்திரயமும்; தீஞ்சொல்லும், முக்கனியுந் தம் நாவிற்கு ஆகுமெனக் கொள்ளுமியல்பினர் மற்றைய வற்றை நீக்காமலென் செய்வர்? நம்பத்திராதிபர் மேற் கொண்ட வியல்பு நல்லதாமாக அரங்கசாமியா ரியல்போ சங்கரமாயிருக்கின்றது.

"உம்பரெல்லாம் ஆய்ந்து நின்ற" என்புழி மகரத்தை யாகாரத்தொடுங் கூட்டிக்கொள்ளேமென முரணினும் இலக்கண மிவரைப்பிடர் பிடித்துந்தி மகராகாரங்கொள்ளும்படி செய்யுமென்பதை மறந்தனர் கொலோ? அந்தோ! பிராமணராயவிவர்க்கு இக்கதி வந்தமைபற்றி மிகவும் பரிதபிக்கின்றோம்.

சிந்தாமணிச்செய்யுளை மேற்கோள் காட்டுமிடத்து, 'விஞ்சை' யென்றெழுதவறியாது 'விஞ்ஞை' யென்றெழுதிய விவர்க்கேனோ வீண்வாய்!

ஆநந்தக்குற்றமே யாங்காங்கு மலிந்து கிடக்கின்ற இந்நூலில் முதற்கவி மட்டிலேயே நம்பத்திராதிபர் ஆநந்தக்குற்றங்காட்டி னின்றார். இவர் தாங்கொண்ட கொள்கையை வலியுறுத்த வேண்டுமாயின் ஒரு நூலின் றொடக்கத்திலுள்ள செய்யுளை யெடுத்தே மேற் கோள் காட்டல் வேண்டுமே யன்றி நூலினடுவணுள்ள தோர் செய்யுளினை யெடுத்துக்காட்டி யொழித லேற்புடைத்தன்றென்க. அன்றியுஞ் சிந்தாமணியாதிய சங்கச் செய்யுள்கட்கு ஆநந்தக்குற்றங்கூற லடாதென் றுரைக்கும் ஆசிரியர்நச்சினார்க்கினியரது பத்துப்பாட்டுரையையு முற்றுநோக்கித் தெளிவாராக.இனிப்பதினாயிரக் கணக்காகச் செய்யுள்செய்யும் மகாகவிகளாகிய கம்பர்முதலாயினார் 'நிரங்கு சாக்கவய:' என்ற வடநூல் விதிப்படி சிறிது வழீஇயினாலு மிழுக்கில்லை; 70-அல்லது 80-செய்யுண்மட்டிலே, கீரைத்தண்டு பிடுங்க ஏலேலப்பாட்டுப் பாடிய கதையாய் முக்கி முயன்று செய்யும் புன்கவிகட்கு அவ்விதி யொவ்வாதாம் பிறவென்க. யானைக்கு மதம்பிடித்தா லழகாமன்றிப் பூனைக்கு மதம்பிடித்தா லழகாகாதே.

இனி 'யகர'த்திற்கு 'இகர'ம் மோனையா மென்று யாப்பிலக்கணங்கள் கூறுகின்றனவே யன்றி 'அகரம்' மோனையாமென்று யாண்டுங்கூறிற்றில. சிந்தாமணி திருக்குறளாதிய நூல்களிற் சில செய்யுட்களில் மோனைத்தொடையே தழுவப்பட வில்லையாக, அவற்றுண் மோனைப்பிறழ்வு காட்டப் புகுந்துவிட்டார் அரங்கசாமியார்! எதுகை மோனை நியமமெலாம் பிற்காலத்தார்க்கென்று முன்னூலார்வகுத்த விதிகள். அவற்றால் ஓசையின்பம் பயத்தல் கண்டு அவற்றை யநுசரித்தே பிற்காலத்தார் யாவரும் நூல் செய்வாராயினார். அவற்றின் வழீஇயினாரெல்லாம் முற்காலத்துச் சங்கச்செய்யுட்டமிழ் நடையையே தழுவுவாராயினார். இவ்வாறன்றி நமது கிருஷ்ணமாசாரியர் கட்டுரைச்சுவையற்ற வெளிய தமிழ்நடையிலெழுதியிருத்தல் நூல் படித்த யாவரும் அறிவர்; இப்புன்னூலுக்கு ஓசையின்பமுமில்லாதொழியின் விகாரப்பேய் மலிந்துள இந்நூல்வழி யாவர் செல்லுவார்? "சனியானானாரோவன்னான்" என்றெழுதித் தொலைத்திருந்தாற் குற்றங் கூறாது விடுத்தேயிருப்பர் நமது ஞானபோதினிப் பத்திராதிபர். 'பிரமன் முதலும்ப ரெல்லாம், ஆய்ந்து நின்ற மறைமுடிவிற் பழுத்த செழுங் கனியானான் யாரோவன்னான்' விவேகமுள்ள அரங்கசாமியார் கண்ணுக் காதல் புலப்பட்டமை பற்றிக்கழிபேருவகை பூக்கின்றாம். எனினும் பிரமம் புலப்படற் பேறடைந்தார் பாடெல்லாம் நம்போலியார் மொழிவேலினாற் போழுண்டு போதலாமாயின் அதனையவாவுவா ரொருவருமிலராவரென்க.

இரண்டாஞ் செய்யுள் பொருத்தமிலுவமை யுடைத்தாதலைப் பாடலிலுள்ள இருவகை யடைமொழிகளையு மொட்டிநோக்கி 'ஐயகோ! உவமை பொருத்தமின்றாய்க் கழிந்ததே!' என்று கருதி யடைமொழியாளரா யொதுங்கக்கடவர்.

புல்லறிவாள ஞெருவன் வாய்க்கு வந்ததைப் பிதற்றி 'இஃது ஏகபாதம்; இதற்கு நால்வேறு பொருள் காண்மின்' என்றுழிப் பேரறிவாளர் தங் கல்வி நலத்தால் அதற்குப் பொருள் கண்டாராயின் அஃது அவரது மேம்பாட்டை வலியுறுத்துமேயன்றிப் புல்லறிவாளனுக் கொன்று மின்றும். அதுபோல நமது அரங்கசாமியார் வாய்க்கு வந்தன குழறினும் அவற்றிற்கும் பொருள் காணவல்லர் பத்திராதிபர். அத்தகையார் 'பொருட்டெளிவின்மை' யென்றால் அது தம்போலும் பண்டிதரல்லாத பிறர்க்கே யென்றுணர்க. நூலெழுதியவர்க்கே பொருள் விளங்காமையா லன்றோ நமது அரங்கசாமியார் வந்து விளக்க வேண்டியதாயிற்று; இதவு மொக்கும், நூலேயவ் ரெழுதியிருந்தாலன்றோ அவர்க்குப் பொருளுந் தெரிந்திருக்கும்? நூலியற்றினர் யாவரோ? அஃதிறைவனுக்கே வெளிச்சம்.

நமது ஞானபோதினிப் பத்திராதிபர் இப்போலி நூலின்கண் ஒருமையேயன்றிப் பன்மையும் மயங்கிக் கிடத்தல் கண்டு காட்டினராக, நமது அரங்கசாமியார் அவரை இந்நூலின் 'முழுமையுந் தெரிந்தவராகக் காண்கிலர்' என்கின்றனர். அவர் தமது பத்திரிகையின் கண் அதிக இடமின்மை பற்றி நூலிலுள்ள முழுமையுங் காட்டா தொழிந்தனர்; இனிக்கடவுளை ஒருமையாகவும் பன்மையாகவு முரைத்தலேயன்றி யுயர்திணையாகவு மஃறிணையாகவு முரைத்தலும் வழக்கே: அது யாவர்க்கு முடன்பாடே. இதையெடுத்து உவமைகூறி னஃதேற் புடைத்தாமா றெங்ஙனம்? அன்னி பெஸண்டம்மை யென்ன! கிருஷ்ணபகவானு? கிருஷ்ண பகவானைப் பலருங்கடவுளென்று தொழுது கொண்டாடுதல் போல நமது அன்னிபெஸண்டம்மையை பலருங் கடவுளென்று தொழுது கொண்டாடக் காண்கிலமால். ஓ! ஒக்கும்! ஒக்கும்!! நமது அரங்கசாமி யாரும் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியரும் போந்து 'யாங்கள் தொழுந் தெய்வம் அன்னி பெஸண்டம்மையே' யென்று சொல்வார்கள் போலும்!

'நாலாட்டின் பருவம், ஒவ்விய, மீட்டுதற்கு அருள் விக்கும் என்பன வாதிய வழக்காறல்லாச் சொற்பிரயோகம்' என்று ஞானபோதினிப் பத்திராதிபர் அறைந்ததற்கண் யாதோரிழுக்குமின்றே. அங்ஙனமாகவு மிவர் மேற்காட்டியவற்றிற்குத்தக்க மேற்கோள் நல்லிசைப்புலவர் நவின்ற பாமுறைகளினின்று மெடுத்துக் காட்டித் தம்பக்க நிறுவும் வலியிலராய் அமங்கலப்பேதை யென வழுதரற்றுகின்றனர். ஐகாரச்சாரியை பெற்று ஓராட்டை ஈராட்டை நாலாட்டை யெனப்பயின்று வருமேயன்றி 'நாலாட்டின்' என 'இன்'சாரியை பெற்றுவருதல் மரபன்று, அது 'மரபுக் கொத்ததே' யென்று வாளாகாரண மின்றி மயங்கி யுரைத்தல் அரண்யருதிதமாய்க் கழியு மெனக' 'எதுகைக் கேற்ப நாலாட்டின் என்றார்' என்றலும் வழு; இத்தகைப் சொற்களுபயோகியாமலே யெதுகை மோனை நயம்பெறப் பாடலே சிறப்புடைத்

தாம். அவ்வாறு பாடத்தெரியா விடிற்பாடாது வாய்வாளாமை மேற்கொண்டொழிக்லே மாண்புடைத்தாம். அவற்றை நிறுவமாட்டாமையின் நூலாசிரியர் மீது அவை குற்றங்களாகவே நிலவுகின்றன வென்பது மலையிலக்கே.

பாடினரும் பாடப்பட்டாரும் மக்களாயுயிர்த்திருப்புழி ஆநந்தக்குற்றம் படப்பாடலாகா தென்ற விதியினுணர்ச்சிக்கு இவர் யாவர்? இவரது உணர்ச்சி யெல்லாம் இழிதகவுடைய திரிபுணர்ச்சியே.

'சென்ற வெழிலாரன்னி' யென்புழியிருவரு மக்களாயுயிருடனிருப்புழியங்ஙன மிசைக்கப்படாது. இதனுண்மையை யுய்த்துணரு மதுகையிலராய அரங்கசாமியார் அறிவகற்றுங்கல்வி' யென்ற நீதிநெறி விளக்கச்சொற்றொடரை யெடுத்துக்காட்டுவாராயினர். அஃதிண்டைக் கேலாமை காண்க.

• அறிவுடையீர்காள்! இவர் 'மலைமகள்', 'கலைமகள்', 'அலைமகள்' என்ற மங்கலமுதன் மொழி பெற்ற சொற்றொடர்களை யெடுத்துக்காட்டுகின்றனர். இவை யனைத்தும் ஆநந்தக்குற்ற முள்ளனவாய் நச்சுத்தன்மை பூண்டனவாயினும், "நஞ்சுமமுதமாம் மங்கலம்புகினே" என்ற இந்திரகாளிய முடையார் ஆணையின்படி புரையில்லனவாம். இந்திரகாளிய நூற்பெயருங் கேட்டறியாத விப்புல்லறிவாளர் மாட்டு யாம் யாது புகல்வது?

"நாசத்தின் வினையுலப்பக் கைப்பிடித்த வாணழுவி" யென்புழி மோனை பிறழ்ந்து கொண்ட குறிதவறி அது நூலின்மீதும் நூலுடையார்மீதும் வீழ்ந்து குறைபாடியற்றி விட்டது கண்டு நம் அரங்கசாமியார் பரிதபிப்பது நேரிதே. கூறியவற்றையே மீட்டு மீட்டுங்கூறிப் பெருங்குரல் காட்டி யழுதிரங்கும் பழுது அரங்கசாமியாரெய்திய தெவனோ? 'வாழி கூறும் பாவிற்பெரிய யாப்புப்பிழைகள்மூன்றுள' வென்றவெம் ஞானபோதினிப்பத்திராதிபர் கூற்றின் பகுவாயி னெயிற்றினிடைக்கிடந்து துஞ்சுறும் அரங்கசாமியார் நிலையைச் சற்றே கண்ணுறுவீர்! அறிவான் மிக்கீர்! இனி ஞானபோதினிப்பத்திராதிபர் 'அன்னிபெஸண்டு அம்மை சரித்திரம்' என்னுமொரு போலிநூலின் மீதேற்றியுள்ள குற்ற மனைத்தும் பரிகரிக்கப்படாமல் மீட்டும் அக்குற்றங்கள் கொடிகளாகவே நின்று அந்நூலுடையார் மேல் உலவி வட்டமிடுகின்றன. இப்போது நந்த மரங்க சாமியார் கதை வறுப்புச்சட்டியினின்று நெருப்பினிடத்திலேயே வீழ்ந்ததுபோலாயிற்று. இனியேனுமிவ்வாறு பொருளியல்புணரு மூானின்றி வாதப்போர்க்கு வந்து சொற்காலொடிந்து எற்றுண்டொழியாதிருக்கக்கடவர். 'இளங்கன்று பயமறியாது' என்றாற்போலக் கல்வியறிவிற்றேரு மிளஞ்சிறாராகிய நமது அரங்கசாமியாரை யாமொன்றுஞ் செய்யாது சிறிது கடைக்கணித்து விடுகின்றோம்.

சமுத்திரபுரவாசி.

## சமாசாரக் குறிப்புகள்.

மகாகனம் பொருந்திய விக்டோரியா சக்கிரவர்த்தினி புத்திரர்களில் இரண்டாவது புத்திரராகிய ஆல்பர்ட்டு என்றும் **டியூக் ஆப் எடின்பரோ** என்றும் பேர்பெற்றவர் 1844-ம் வருஷம் ஆகஸ்டுமீ 6வ யிற் பிறந்தவர். 1874-ம் வருஷம் ஜனவரிமீ 23வ ருஷியாவுக்குப் பிரதான நகரமாகிய **பீற்றர்ஸ்பர்க்** என்னும் பட்டணத்தில் தற்காலத்திய ருஷிய சக்கரவர்த்தியின் அத்தையாரைக் கல்யாணஞ் செய்துகொண்டார். இவர்களிருவருக்கும் பிறந்த குழந்தைகள் ஐவர். இவர் யுத்த கப்பல் அதிகாரிகளுக்குத் தலைமையாயிருந்தவர். இவர் திடீரென்று நாளது வருஷம் ஆகஸ்டுமீ 7வ மண்ணுலகம் விட்டு விண்ணுலக மேகினர். அதற்கு பிரிட்டிஷ் ராஜ்யமுழுதும் வியசனசாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. ராஜவிசுவாசத்தில் தமக்குச்சமமில்லையெனக் கருதப்பட்ட இந்தியரும் மிகவும் வருத்தமடைந்திருக்கிறார்கள். மஹா ராணியினுடைய வயோதிகதிசையில் வந்து அநுபவித்த துக்கங்களில் இதுவும் ஒன்றாகும். ஆயினும் இது மிகவும் உதிர சம்பந்த மாகையால் அதிக வருத்தப்படுவது இயற்கையேயாகும். அங்குள்ளவர்கள் அந்த அம்மாளைத் தேற்றுவார்களென்று நம்புகிறோம்.

***

**முதற்குறள் உண்மை.** வைதமக திரஸ்காரி என்பவர் ஒருவர் முதற்குறள் உண்மையென்னும் நூல் செய்து பத்திராதிபரது அபிப்பிராயத்திற்கு அனுப்பியிருக்கிறார். அதை நன்றாராய்ந்து வருகிற சஞ்சிகையில் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படும்.

***

**திருவிடைமருதூர்க் கலம்பக அரங்கேற்றம்.** ம-ா-ா-ஸ்ரீ திருஎவ்வுளூர் இராமசாமி செட்டியார் அவர்கள் மத்தியார்ஜுநம் என்னும் திருவிடை மருதூரின்மீது இயற்றிய கலம்பகப் பிரபந்தமானது சென்னை முதியாலுப்பேட்டை ஹைஸ்கூல் ஹாலில் சென்ற ஜூலைமீ 29வ ஆதிவாரமுதல் பிரதி ஆதிவாரமும் பற்பல வித்வான்களால் பிரசங்கிக்கப்பட்டு வருகின்றது. அவர்களில் முதல் ஞாயிற்றுக்கிழமை பிரசங்கித்தவர் பிரமஸ்ரீ சதாவதானி சுப்பிரமணிய ஐயர் அவர்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை பிரமஸ்ரீ கோபாலாசாரியரவர்கள். மூன்றாம்வாரம் ம-ா-ா-ஸ்ரீ தண்டலம் பலசுந்தர முதலியார் அவர்கள். இதுவரையில் இச்சபையர்களால் அதிவினோதமாக மேற்படி கலம்பகப் பிரபந்தமானது அரங்கேற்றப்பட்டு வந்திருக்கிறது. வருகிற வாரங்களிலும் இவர்களும் இவர்களைபோன்ற வித்வான்களும் பிரசங்கிக்கப் போகிறதாகத் தெரியவருகிறது.